விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 24 வியாழக்கிழமை (09.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 21

### கோட்டா அரசியல்வாதியாக இருக்காததால்

# உண்மையை பேசுகின்றார்

# சரியானதையே செய்வார்

## பாராளுமன்றில் சம்பந்தன் நம்பிக்கை வெளியீடு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல்வாதியாக இருக்காத காரணத்தினால் அவர் உண்மைகளை பேசுகின்றார். ஆகவே அவர் சரியானதை செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### எரிபொருளுக்காக

## முண்டியடித்த யாழ் வாசிகள்

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கில் ஈரான்-அமெரிக்க போர்ப்பதற்றம் அதிகரித்ததும், நேற்று யாழ்ப் பாணத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக நீண்ட வரிசையில் யாழ்ப்பாண 23

## விக்னேஸ்வரன் இந்தியா பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று இந்தியா பயணமாகியுள்ளார்.

எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் சென்னையில் 23

## பயணிகள் விமானம் ஈரானில் விபத்து




12

## ஈரான் ஏவுகணை தாக்குதல் 80 அமெரிக்க வீரர்கள் உயிரிழப்பு

### போர் பதற்றம் அதிகரிப்பு

தங்கம், மசகு எண்ணெய் விலை உயர்வு

அமைதி காக்குமாறு உலக நாடுகள் வலியுறுத்து 12

## முல்லைத்தீவில் இளைஞனின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிப்புப் பகுதியில் நேற்றுக் காலை இந்த சம்பவம் நடந்துள்ளது.

இதில் முள்ளியவளையை சேர்ந்த இராமச்சந்திரன் வசந்தராசா (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

2012 ஆம் ஆண்டு முல்லைத்தீவு நீதிமன்றில் வசந்தராசா மீது வழக்கொன்று தொடரப்பட்டு, நிலுவையில் உள்ளது. அவர் வழக்கு தவணைகளிற்கு சமுகமளிக்காததையடுத்து, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. 23

## தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படும்

### சபையில் அமைச்சர் டக்ளஸ் உறுதி

(கொழும்பு)

தேசிய கீதம் தமிழிலும் பாடப்படுமேயன்றி எச்சந்தர்ப்பத்திலும் அதில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாது தேசிய கீதத்தில் மாற்றத்தை கொண்டுவருவது தொடர்பில் அமைச்சரவை 23

### ஐரோப்பிய நாடு செல்ல முயன்ற

## கரவெட்டி இளைஞன் ஒருவர் துருக்கியில் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

முகவர் மூலம் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்ல முயன்ற கரவெட்டி பகுதி இளைஞன் ஒருவர் துருக்கியில் சடலமாக மீட்கப்பட்டதாக துருக்கியில் இருந்து தொலைபேசி மூலம் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. 23

## அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையை மாத்திரமே புதிய அரசு முன்னெடுக்கின்றது

### சபையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்துக்குள் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து முற்றுமுழுதாக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையை மாத்திரம் முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை 23

## துன்னாலையில் கோஷ்டி மோதல் இரு வீடுகள் சேதமாக்கப்பட்டது

### மூவர் படுகாயம்; பொலிஸார் விசாரணை

(கரணவாய்)

துன்னாலை குடவத்தை பகுதியில் இரு பகுதியினருக்கு இடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இரண்டு வீடுகள் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 23

### பதவியேற்ற பின் முதல் முறையாக

## யாழ்.மாவட்ட ஆயருடன் ஆளுநர் சார்ள்ஸ் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநராக பதவியேற்ற பின்னர் நேற்று முதன் முறையாக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்துள்ளார். குறித்த சந்திப்பு நேற்றுக் காலை எட்டு மணியளவில் ஆயரின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. 23

# 2020இல் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள்

## தேசிய அடையாள அட்டைக்கு மார்ச் 31இற்கு முன்னர் விண்ணப்பிக்குக

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 2020இல் தோற்றவுள்ள மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்பதிவுத் திணைகளத்துக்கு அனுப்பி வைக்குமாறு சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாக்களின் பீடாதிபதிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறும் திணைக்களம் கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டதனால், உரிய நேரத்துக்கு விநியோகிப்பதில் பல்வேறு சிரமங்களை முகம்கொடுக்க வேண்டிய ஏற்பட்டதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது (ம-3)


உ

அச்சுவேலி தெற்கு மருத்துவமனைச்சாலை

அமரர் முத்துக்குமாரசுவாமி திலீபன் அவர்களின்

(முகாமையாளர், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - யாழ்ப்பாணக் கிளை)



ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் திருவாசக இசையர்ச்சனையும்

மண் மகிழ 24-09-1979 கண் நெகிழ 11-12-2019

எமது குடும்பத்தின் செல்வத்தை இழந்து நாம் செய்வதறியாது கலங்கி நின்ற வேளை ஆயிரக்கணக்கானோராய் எம்மை நாடி வந்து ஆறு தலளித்தீர்கள். அத்தனை நெஞ்சங்களுக்கும் நன்றியுடையோம்.

காலை 9.30 மணி தொடக்கம் இடம்பெறும் திருவாசக இசையர்ச்சனை மற்றும் அமரர் எழுதிய பங்குச்சந்தை தொடர்பான நூல் வெளியீடு என்பவற்றில் பங்கேற்பதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய பாசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை குறித்த இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றிடுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

**காலம் : 11.01.2020 சனிக்கிழமை காலை 9.30 மணி**

**இடம் : சிவசக்தி மண்டபம், ஆவரங்கால்.**

**திருவாசக இசையர்ச்சனை**
**குரலிசை :** திரு.அ.அமிர்தலோஜனன், திரு.அ.அமிர்தசிந்துஜன்
**வயலின்:** திரு.கா.குகபரன், **மிருதங்கம் :** பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா
**முகர்சிங் :** திரு.சி.செந்தூரன்

மருத்துவமனைச்சாலை, அச்சுவேலி. (C-8887) குடும்பத்தினர்



## கணனி திருத்தம்

**IPhone, IPad, ICloud Unlock**

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்

தொடர்புகளுக்கு :

**ALM Computer System - 077 243 8537**

(1806)



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் **கலாலயா** பயிற்சியகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பெற்றது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

(C-8890)

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 19.01.2020 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 20.01.2020 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

GURU



# சேவைநலன் பாராட்டு



திருமதி **சசிக்கா ஸ்ரீஸ்கந்தராஜா**

ஆரம்பக் கல்வி - உயர்தரம் வரை

யா/வேம்பபடி மகளிர் உயர்தர பாடசாலை

A/L - 1965 - Bio

**ஆசிரியர் தொழில்**

1988 - புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்
1991 - பலாலி ஆசிரியர் கலாசாலை
1998 - யாழ்.மத்திய கல்லூரி
2018 - ஏப்ரல் 05 - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

வேம்படி அன்னையில் கால்பதித்து
அறிவியல் ஆசிரியராய் - மாணவிகளின்
பாசமிகு பகுதித் தலைவராய்
அளப்பரிய சேவையாற்றி
அகவை அறுபதில் ஓய்வுபெறும்
எமது சக ஆசிரியை அவர்கள்
மேன்மேலும் பல வெற்றிகள் கண்டு
சிறப்பாக வாழ அன்புடன் வாழ்த்தும்

**ஆசிரியர் குழாம்**
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(C-8888)

## முஸ்லிம் பயங்கரவாத அச்சுறுத்தல் நிலவுகையில்

# தேசிய புலனாய்வு அதிகாரியாக முஸ்லிமா?

# சிறுபிள்ளைத் தீர்மானங்கள் வேண்டாம்

## பொன்சேகா கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

**இலங்கைக்கும், உலகத்திற்கும் முஸ்லிம் பயங்கரவாத அச்சுறுத்தல் இருக்கின்ற நிலையில் தேசிய புலனாய்வு அதிகாரியாக முஸ்லிம் ஒருவரை ஏன் நியமித்தார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கேள்வியெழுப்பினார். அத்துடன், தமிழ் பயங்கரவாத சூழல் ஒன்று இருந்த நேரத்தில் தமிழ்ப் புலனாய்வு அதிகாரியை நியமித்திருந்தால் யுத்தத்தை முடித்திருக்க முடியுமா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.**

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரண்டு நாட்கள் விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகியது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று நாட்டில் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாது இராஜாங்க அமைச்சர் ஒருவருடன் மட்டுமே அரசாங்கம் பயணிக்கின்றது. அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சர் இல்லை. இதுவொரு பாரிய பிரச்சினையாகும்.

இவையெல்லாம் அரசாங்கத்தின் குறைபாடாகும். சிறுபிள்ளைகள் தீர்மானம் எடுப்பதைப் போல் அரசியல் தீர்மானம் எடுக்க முடியாது. அத்துடன் இன்று வீரர்கள் போன்றும் பௌத்தர்கள் போன்றும் பேசுபவர்கள் அன்று புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்த காலத்தில் வெளியில் வரவில்லை.

தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக கூறும் ஜனாதிபதி பயங்கரவாதத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாகக் கூறினார். அதற்கு முதலில் பாதுகாப்பு அமைச்சரை நியமிக்க வேண்டும்.

அதேபோல் தகுதியானவர்களை பதவிக்கு நியமிப்பதாகக் கூறி இருவரை நியமித்தார். ஒருவர் தேசியப் புலனாய்வு அதிகாரி, இன்னொருவர் அரச புலனாய்வு அதிகாரி.

இந்த இருவரும் பொறுப்புக்கு தகுதி இல்லாதவர்கள். இன்று முழு உலகத்திலும், இலங்கையிலும் முஸ்லிம் பயங்கரவாத அச்சுறுத்தல் இருக்கின்ற நிலையில் அரச புலனாய்வு அதிகாரியாக முஸ்லிம் அதிகாரி ஒருவரை நியமித்து எவ்வாறு சேவையினை முன்னெடுக்க முடியும்?

ஆனால் இவர்கள் இருவரும் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் என்ற காரணத்தினால் இந்த பதவி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் பயங்கரவாத சூழல் ஒன்று இருந்த நேரத்தில் தமிழ் புலனாய்வு அதிகாரியை நியமித்திருந்தால் யுத்தத்தை முடித்திருக்க முடியுமா? அது அவர்களின் பொறுப்புக்களை சரியாகக் கையாள முடியாத நிலைமைக்கே கொண்டு செல்லும்.

அதேபோல் இப்போது முஸ்லிம் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவரால் முஸ்லிம் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட முடியாது.

அவரது குடும்பம், வதிவிடம் என அனைத்துமே தடையாக இருக்கும். எனவே பொறுப்பான அதிகாரிகளை சரியான இடத்தில் இந்த அரசாங்கம் நியமிக்க வேண்டும்" என, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஷானி அபேசேகரவுக்கு வெளிநாடு செல்லத் தடை



(நுகேகொட)

ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்கள் தொடர்பில் சி.ஐ.டி எனப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளருக்கு நீதிமன்றம் வெளிநாடு செல்லத் தடை விதித்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் காலி பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட செயலாளராக கடமையாற்றிய ஷானி அபேசேகர உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று முன்தினம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் பணி நீக்கம் செய்யப்பட்டார். முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் இடம் பெற்ற தாகக் கூறப்படும் இரகசிய உரையாடல் தொடர்பான விசாரணையின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டார். இந்நிலையிலேயே அவருக்கு நுகேகொட நீதிமன் றம் வெளிநாடு செல்ல நேற்று பயணத்தடை விதித்தது.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குரல்பதிவுகளை வெளியிட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகளை மறக்கடிப்பதற்கு அரசாங்கம் முயற்சி

## அகிலவிராஜ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டு மக்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்கொண்டுவரும் நிலையில், ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய குரல்பதிவுகளை வெளியிட்டு அதனையே மக்கள் மத்தியில் பேசுபொருளாக்கி, உண்மையான பிரச்சினைகளை மறக்கடிப்பதற்கே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசம் குற்றம்சாட்டினார்.

மேலும் எதிர்வரும் பொதுத் தேர்தல் வரை இத்தகைய சர்ச்சைகளைத் தோற்றுவித்து, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மழுங்கடிப்பதன் ஊடாக தேர்தலில் பெருமளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கமே இதன் பின்னணியில் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல் குரல்பதிவுகள் வெளியாகியிருப்பதுடன், அது குறித்து அனைவரும் கருத்து வெளி யிட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் அதேவேளை, அதற்காக விசேட தெரிவுக்குழுவொன்றையும் நியமிக்க முடியும். அதேபோன்று சட்டதிட்டங்களுக்குப் புறம்பாகவும், நீதித்துறைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் விதமாகவும் எவரேனும் செயற்பட்டிருப்பின் அவர்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் இவற்றை விடவும் நாட்டு மக்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்கொண்டுவரும் நிலையில், ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய குரல்பதிவுகளை வெளியிட்டு அதனையே மக்கள் மத்தியில் பேசுபொருளாக்கி, உண்மையான பிரச்சினைகளை மறக்கடிப்பதற்கே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் வரை இத்தகைய சர்ச்சைகளைத் தோற்றுவித்து, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மழுங்கடிப்பதன் ஊடாக தேர்தலில் பெருமளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கமே இதன் பின்னணியில் இருக்கிறது.

எனவே இத்தகைய சர்ச்சைகளின் மூலம் மக்கள் பிரச்சினைகளை மழுங்கடிக்கச் செய்ய வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உதான இல்லாததால் தோற்றோம் இவ்வாறு கூறுகிறார் மலிங்க

இந்தூரில் இந்தியாவுக்கு எதிரான 2வது ரி-20 போட்டியில் இலங்கை தோல்வியடைந்ததற்கான காரணத்தை அணித்தலைவர் மலிங்கா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தூர் மைதானத்தில் நடந்த 2வது ரி-20 போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது.

முதல் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் 1-0 என இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3வது மற்றும் கடைசி ரி-20 போட்டி புனேவில் நாளை நடைபெறும்.

2வது ரி-20 போட்டிக்கு பின் பேட்டியளித்த இலங்கை அணித்தலைவர் மலிங்க, உதானா எங்கள் முக்கிய பந்து வீச்சாளர், ரி-20 போட்டியில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்.

நாங்கள் பந்து வீச வெளியே செல்வதற்கு சற்று முன்பு அவர் காயமடைந்தார்.



இந்தியாவுக்கு எதிரான பந்து வீச்சின் போது அவர் களமிறங்கவில்லை.


உதனா இப்போது குணமடைந்து வருகிறார். நாங்கள் இளைஞர் களுக்கும் வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று கூறினார்.

# துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே தோல்விக்கு காரணம் -ஆதர்

துடுப்பாட்ட வீரர்களின் அசமந்த போக்கே இந்திய அணிக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு கிரிக்கட் போட்டியில் தோல்வியடையக் காரணம் என இலங்கை அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் மிகி ஆதர் தெரிவித்துள்ளார்.

இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இரண்டாவது இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டி தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த போட்டியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த ஆட்டத்திறனை



வெளிப்படுத்தினர். எனினும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் உரிய ஆட்டத் திறனை வெளிப்படுத்தவில்லை.

அத்துடன் சகல்துறை ஆட்டக்காரர்கள் சிறந்த ஆட்டத்திறனை வெளிப்படுத்த தவறியுள்ளதாகவும் இலங்கை அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் மிகி ஆதர் தெரிவித்துள்ளார்.

# ஐ.சி.சி டெஸ்ட துடுப்பாட்ட தரவரிசை; விராட் கோலி தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) நேற்று வெளியிட்ட டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

கேப்டன் விராட் கோலி 928 புள்ளிகளுடன் தொடர்ந்து ஒரு மாதத்துக்கும் மேலாக முதலிடத்தில் நீடித்து வருகிறார். கோலியை முறியடிக்கும் வாய்ப்பு கிடைத்தும், நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஸ்டீவ் ஸ்மித் சோபிக்கத் தவறியதால் தொடர்ந்து 2-வது இடத்திலேயே நீடிக்கிறார். அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் 911 புள்ளிகளுடன் 2-வது இடத்திலேயே நீடிக்கிறார்.

இந்திய அணி வீரர் ரஹானே 759 புள்ளிகளுடன் 2 இடங்கள் சரிந்து 9-வது இடத்துக்கு நகர்ந்துள்ளார். புஜாரா 791 புள்ளிகளுடன் 5-வது இடத்தில் இருந்து 6-வது இடத்துக்கு வீழ்ச்சி அடைந்துள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரட்டை சதம் அடித்ததால், அவுஸ்திரேலிய வீரர் லபுஷேன் 827 புள்ளிகளுடன் 3-வது இடத்துக்கு முன்னேறி, தனது கிரிக்கெட் வாழ்க்கையில் சிறந்த




தரவரிசைக்கு நகர்ந்துள்ளார். நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 549 ரன்கள்சேர்த்துள்ளார் லபுஷேன்.

அதேபோல ஆஸி. பேட்ஸ்மேன் டேவிட் வார்னர் நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததையடுத்து. 793 புள்ளிகளுடன் 5-வது இடத்துக்கு உயர்ந்துள்ளார்.

நியூஸிலாந்து கேப்டன் கேன் வில்லியம்ஸன் 814 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் இருந்து 4-வது இடத்துக்குப் பின் தங்கியுள்ளார்.

## சிம்பாவே டெஸ்ட் அணியின் புதிய தலைவராக வில்லியம்ஸ்



ஸிம்பாப்வே டெஸ்ட் அணியின் புதிய தலைவராக ஷேன் வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் ஒருநாள் சர்வதேச, மற்றும் 20 க்கு 20 அணிகளை இசமு சிபாபா இடைக்கால அடிப்படையில வழிநடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸிம்பாப்வே கிரிக்கட் சபையின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


## பகிரங்க ஏல அறிவித்தல்

### வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சந்தைகள், சாட்டி வாகனத் தரிப்பிடம், மலசலகூடம் மற்றும் கடைகள் என்பவற்றை பகிரங்க ஏலம் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ஒன்றை கொண்டு வருவதுடன் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 500.00 இனைச் செலுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்களை தலைமை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இடம் : தலைமைக் காரியாலயம், வங்களாவடிச்சந்தி, வேலணை
காலம்: 17.01.2020 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி.ப 02.00 மணி

(c-8889)

தவிசாளர், பிரதேச சபை, வேலணை.


## ஐ.பி.எல் இறுதி மே 24

ஐபிஎல் 2020 சீசனை தொடங்குவதற்கான வேலைகளை ஐபிஎல் ஆட்சி மன்றக்குழு செய்து வருகிறது. போட்டியை எத்தனை நாட்கள் நடத்தலாம், எப்பொழுது தொடங்கலாம், இறுதிப் போட்டியை எப்போது நடத்தலாம் ஆகியவற்றை பற்றி யோசித்து வருகிறது.

இந் நிலையில் ஐபிஎல் போட்டிகள் 57 நாட்கள் நடைபெற இருப்பதாகவும், மார்ச் 29-ந்தேதி ஐபிஎல் சீசன் தொடங்க இருப்பதாகவும், மே 24-ந்தேதி இறுதி போட்டி நடைபெறும் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.


# மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 07 - 1937



இறப்பு 08 - 01 - 2020

## சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (08.01.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் பாசமிகு கணவரும் சிவனேசன், குலக்கொழுந்து, சந்திரரூபதி, சந்திரமலர், சிவலிங்கம், சிவபாலன், விசயரத்தினம் ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.01.2020) வியாழக்கிழமை நாகேந்திரபுரம் புளியம்பொக்கணையில் இடம்பெற்று பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்திற்கு முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை.

(C-8891)

தகவல்:- குடும்பத்தினர் 077 547 8249

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## இராசேந்திரம் கேசவன்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி மஞ்சுளா கேசவன் அவர்களின் அன்புக் கணவர் இராசேந்திரம் கேசவன் அவர்கள் 08.01.2020 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(c-8886)

பாடசாலைச் சமூகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி





யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை கணக்காளர் நா.இராசநாயகம், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர் சி.முருகையா, கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் சு.திலகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வளிமண்டலத்தில் பிளாஸ்ரிக் துகள் பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பு!

(கொழும்பு)

கொழும்பு மற்றும் கண்டி உள்ளிட்ட நகரங்களில் வளிமண்டலத்தில் மைக்ரோ பிளாஸ்ரிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தொடர்பாக கண்டறியப்பட்டது.



பேராதனை பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பட்டப்படிப்பிற்கான கற்கை நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பிட்டவல இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தினார்.

மைக்ரோ பிளாஸ்ரிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதால் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

மிக நுண்ணிய அளவில் இந்தத் துகள்கள் காணப்படுவதால், சில சந்தர்ப்பங்களில் அவை சுவாசத்தினுடாக உட் செல்லக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


மைக்ரோ பிளாஸ்ரிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதால் வளிமண்டலம் பாதிப்புக்குள்ளாகுவதுடன், நோய்த்தாக்கங்களும் ஏற்படக்கூடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரு வாரங்களாக கொழும்பு நகர வளிமண்டலத்தில் தூசுக்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது. (இ-7)

# முதலாவது சந்திர கிரகணம் குறித்த அறிவிப்பினை வெளியிட்டது நாசா!

(வோஷிங்டன்)

இந்த வருடத்துக்கான முதலாவது சந்திர கிரகணம் நாளை 10ஆம் திகதி நிகழவுள்ளது.



ஓநாய் சந்திர கிரகணம் என நாசாவால் பெயரிடப்பட்டுள்ள இந்த சந்திர கிரகணம் பகுதியளவிலேயே தென்படும் என தெரிவிக் கப்படுகிறது.

நாளை 10 ஆம் திகதி இரவு 10.38 மணி முதல் 11 ஆம் திகதி அதிகாலை 2.42 வரை சந்திர கிரகணம் நிகழவுள்ளது.

இதேவேளை, இந்த வருடம் ஜுன் 5, ஜுலை 5 மற்றும் நவம்பர் 30 ஆகிய திகதிகளில் சந்திர கிரகணங்கள் நிகழவுள்ளன.

அத்துடன், 4 சூரிய கிரகணங்கள், ஒரு வளைய சூரிய கிரகணம் மற்றும் ஒரு பூரண சூரிய கிரகணம் ஆகியவையும் இந்த வருடம் நிகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







# சிகிச்சை முறைகள் பற்றிய இலவச கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

குழந்தைப்பேறு தொடர்பான சிகிச்சை முறைகள் மற்றும் IVF சிகிச்சை முறைகள் பற்றிய இலவச கருத்தரங்குகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கந்தரோடை இல.40 கந்தையா உபாத்தியார் வீதியிலுள்ள சுகாதார சமூகநலன் புரி நிலையத்திலும் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணிவரை ஆனைக்கோட்டையிலுள்ள "அபயம்'' சுகாதார நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இக் கருத்தரங்குகளில் மகப்பேற்று பெண் நோயியல் சிறப்பு வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.சுஜாகரன் கருத்துக்களை வழங்குவார். (இ-5)

# திருவாசக இசையர்ச்சனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.முன்னணிப் பாடகர்களான அழகேசன் அமிர்தசிந்துஜன், அழகேசன் அமிர்தலோஜனன் ஆகியோரது திருவாசக இசையர்ச்சனை நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வயலின் - விரிவுரையாளர் கா.குகபரன், மிருதங்கம் - நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங் - சி.செந்தூரன் ஆகியோர் அணிசேர் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

அமரத்துவமடைந்த கொழும்புப் பங்குச் சந்தையின் யாழ்.கிளை முகாமையாளர் முத்துக்குமாரசுவாமி திலீபன் நினைவாக இடம்பெறும் இந்நிகழ்வில் திலீபன் எழுதிய பங்குச் சந்தைக்கான அறிமுகம் என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (இ-7)

# கனவுகளும் பலன்களும்

## களைப்பாக-பயணம்-தண்ணீரை கண்டால்

● அருவியில் இருந்து தண்ணீர் கொட்டுவது போலக் கனவு கண்டால் பணவரவு இருக்கும். வேலையில் நல்ல முன்னேற்றமும் பதவி உயர்வும் ஏற்படும். சந்தோசமான செய்திகள் கிடைக்கும். செல்வாக்கு உயரும்.

● தண்ணீரில் உங்கள் வீடு இருப்பது போலக் கனவு கண்டால் செல்வம் உங்கள் இல்லம் தேடி வரும். உறவினர்களால் தொல்லையும் வீண் அலைச்சலும் ஏற்படும். நண்பர்களால் நன்மையும் பணவரவும் இருக்கும்.

● தண்ணீரில் மூழ்குவது போலக் கனவு கண்டால் குழந்தைகளால் சந்தோசம் ஏற்படும். பசுவை தேடி கன்று வருவது போன்று எப்பொழுதோ செய்த நன்மைகளின் பலன்கள் உங்களுக்கு இப்பொழுது கிடைக்கும்.

● செடிகளுக்கும் மரங்களுக்கும் தண்ணீர் விடுவது போலக் கனவு கண்டால் உங்களுக்கு நன்மை செய்யவே பிறந்தவர்கள் போல் சிலர் உங்களைத் தேடி வந்து உதவுவார்கள். அவர்களால் மனம் குளிர்ச்சியடையும். புதிய முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

● களைப்பாக இருப்பது போலக் கனவு கண்டால் வெற்றிகரமாகப் போராடிக் கொண்டிருந்த நீங்கள் வெற்றி பெரும் காலத்தின் அருகில் சென்று கொண்டு இருக்கிறீர்கள் என்று உணருங்கள். அதற்கான முயற்சிகளை இன்னும் வேகமாகவும் விவேகமாகவும் செய்தால் வெற்றிக் கனி உங்கள் கையில்.

● எல்லோரும் உறங்குவது போலக் கனவு கண்டால் அடுத்தவர்களுக்கு அறிவுரை கூறும் அந்தஸ்துக்கு வருவீர்கள். உயர்வான பலன்களைப் பெறுவீர்கள்.

● வாகனத்தில் பயணம் செய்வது போலக் கனவு கண்டால் பொழுது போக்கான விடயங்களில் அதிகம் பங்கு கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். புகழ் இருந்தவர்கள் புகழின் உச்சிக்கே போவார்கள்.

● வாகனத்தை தள்ளிக் கொண்டு போவது போலக் கனவு கண்டால் பிரச்சினைகளில் இருந்து எப்படி விடுபடுவது என்று தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டு இருப்பீர்கள். உங்களுக்கு உதவ சில நல்ல உள்ளம் படைத்தவர்கள் உதவி செய்ய முன்வருவார்கள்.

# காரைக்காட்டில் காணித்தகராறு 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

## நால்வர் பொலிஸாரால் கைது

(கொடிகாமம்)


**காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட குழு மோதலில் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் நான்கு ஆண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.**

இந்தச் சம்பவம் மந்துவில் காரைக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் து.தர்சினி (வயது-30), வி.நாகம்மா (வயது - 70), க.சிதம்பரநாதன் (வயது - 70), அ.சுதாகா (வயது-29) ச.சத்தியவதனன் (வயது-28), வெ.ரூபன் (வயது-48), வெ.சுபாசினி (வயது-36) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு ஆண்களும் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-114)







காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு விழா நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தி.மதிவதனன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்

சந், ராகு | சுக், புத | சூரி, சனி, கேது, குரு | செவ்

**09.01.2020**
மார்கழி 24, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 2.45 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 3.40 மணிவரை
சுபநேரம் 8.02-9.32 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை
இரவு ஆர்த்திராகிசேகம்
உலகமே மூழ்கினும் நல்லதைச் சரியாகச் செய்
வளவன்

**மீனம்** - எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகும், பெற்றோர் மீதான பாசம் கூடும், பயணங்கள் கைகூடும்.

**மேடம்** - நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்** - ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நிதிநிலை உயரும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** - குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், மன ஆறுதல் தரும் பயணமொன்று உருவாகலாம்.

**கும்பம்** - சுப செய்திகள் வந்துசேரும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**கடகம்** - தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அரசியல் செல்வாக்கு கூடும் நாள்.

**மகரம்** - உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல் நலன் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** - செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தூரதேசப் பயணங்கள் எண்ணியபடி கைகூடும், பொன்னான நாள்.

**தனுசு** - குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** - வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**துலாம்** - தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** - அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

# குற்றச்செயல்கள் குறித்து தகவல் வழங்க விசேட பொலிஸ் பிரிவு ஸ்தாபிப்பு!

(கொழும்பு)

குற்றச்செயல்கள் தொடர்பாக தகவல் வழங்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டது.

அத்தோடு பாதாள உலகக் குழுக்கள், திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், கப்பம் பெறுவோர், சட்டவிரோதமாகத் துப்பாக்கிகளை வைத்திருப்போர் தொடர்பில் தகவல்களை பெறுவதற்கு விசேட பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவின் பணிப்புரைக்கு அமைய இந்த விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

போதைப்பொருள் விற்பனை, கடத்தல்காரர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பாக சரியான தகவல்களை இந்த விசேட பிரிவிற்கு வழங்க முடியும் என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இதற்காக 24 மணித்தியால சேவைக்குரிய தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 011 258 0518 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்க முடியும். அல்லது 011 258 8499 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக தகவல்களை வழங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது. (இ-7)


## இறை அருளால் இலவச திருமணம்

இராஜமாணிக்கம் SMT அறக்கட்டளை மூலம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கோட்பாட்டுக்கு இணங்கி சாதி சமய வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வழிகாட்டும் ஓர் நிகழ்வாகும். தாய், தந்தையரை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் இறைவனின் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய இறையருள் கைகூடியுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆறு திருமணங்கள் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னோடியாக இவ்வருடம் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம். வைகாசி மாதம் நடக்கும் இரவு திருமண விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து அன்புள்ளக்களுக்கும் கல்யாண சாப்பாடு வழங்கப்படும்.

- மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஆறு திருமணங்களும் பெரியோர்களால் மஞ்சல் கயிற்றில் தாலி எடுத்து கொடுக்க ஒரே மேடையில் தமிழ் சம்பிரதாய முறைப்படி திருமணம் நடைபெறும்.
- திருமணத்திற்கான பட்டுப்புடைவை, வேட்டி சால்வை, மஞ்சல் கயிற்றில் ஒரு பவுண் தாலியுடன் வீட்டிற்கான சமையல் பாத்திரங்களும் வங்கப்படும்.
- இறைவனின் குழந்தைகளுக்கு சாத்திர பொருத்தம் தேவையில்லை.
- மாற்றுத் திறனாளிகள் ஏற்கனவே திருமணம் நிச்சயித்திருப்பின் இருவரது புகைப்படத்துடன் நேரில் வரவும்.
- திருமணம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிவரை பாதுகாவலருடன் நேரில் வாருங்கள்.

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபாம்,
வீடியோ கலாமினி, அச்சுவேலி
தொ.பே: 077 305 3080

(1722)



## காரைநகர் சிவன் - திண்ணபுரம் திருவெம்பாவை தேர் விழா - 2020

### "ஆதிரையான் எம்(ன்) இறைவன்"

பஞ்சரத பவனியில் பௌர்ணமி இறைவன் வருகின்றான், பார்போற்றும் இவ்விழா இன்று எம் ஊரில் நாம் வாழ்வில் சிறக்க நாள்தோறும் அருள் செய்வான், நாயிற்கடையாய் கிடந்த எம்மை தாய் போலத் தேற்றினான், நீங்காமல் எப்போதும் எம் இதயத்தில் இடம் பிடித்தான், அருள் அளித்தான், இருள் விலக்கினான், இன்பமே தந்தான், நோய் வந்து உடல் துஞ்ச, அவனையே கெஞ்சினோம், இயல்பாகவே வந்து, இறை உணர்வு தந்து, உயிர்ப்பித்தான், துயர்கள், இடர்களில் இயன்றவரை அருகில் நின்றான், அந்தம் ஒன்று இல்லா நீண்ட ஆனந்தம் தந்தான், ஆகாயம், பூமி எங்கும் அவன் அருள் ஆட்சி நடக்கின்றது, அறிவினால் அல்ல இறை உணர்வினால் உணர்ந்தோம், மொழியாகி வந்து எம் கரம் பிடித்து எழுதுகின்றான், அன்பாகி, அவனை எழுத எமக்கேது மொழி? இறை தியானத்தில், ஜெபத்தில் மௌனமே மொழி, மாநிலங்கள் போற்றும் அந்த ஆதிரையான் எம்(ன்) இறைவன்.

இ

"மீனாட்சி இல்லம்"
வேதர் அடைப்பு,
காரைநகர்.

காரை S.கெங்காதரன், B.A(S.L),
Dip-in-offi-Admit


# வடமாகாணத்தின் இந்து பௌத்த கலாசாரப் பேரவையில் இரண்டாம்மொழி கற்கைநெறியை மேற்கொண்ட இளைஞர், யுவதிகள் சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள்




வணக்கத்துக்குரிய
ரத்ன தேரர் (பா.உ)
(தலைவர்/ஸ்தாபகர்)



தேசமான்ய
எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன்
(செயலாளர்/அனுசரணையாளர்,
சர்வதேச சட்டஆலோசகர்)

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் கடந்த 06 மாத காலங்களாக நடாத்தப்பட்ட தமிழ்மொழி மூல சிங்களபாட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி 600 மணித்தியாலங்கள் நடைபெற்று இவர்களுக்கான பரீட்சைகள் ஜனவரி 5ம், 6ம் திகதிகளில் நடைபெற்றது. இக்கற்கை நெறியில் G.C.E A/L சித்தியடைந்த 181 பேர் கலந்து கொண்டனர்.











இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் வண. அத்துரலியே ரத்னதேரோவின் தலைமையில் 29.01.2020 அன்று நடைபெறவுள்ளது. இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக மாண்புமிகு கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் ஏனைய சில அமைச்சர்களும் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது வண. அத்துரலியே ரத்னதேரர் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு இம்மாணவர்களுக்கான மேலதிக பயிற்சிகளை வழங்கவும் வடமாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் இவர்களுக்கான இரண்டாம் மொழி ஆசிரிய நியமனங்களை வழங்கி வைக்கவுமுள்ளார்.

இதன் அடிப்படையில் 2019ம் ஆண்டு வரை G.C.E A/L சித்தியடைந்த தகுதியான 1000 மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு ஈடான மொழியியல் பயிற்சியினை வழங்கி பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களைக் கொண்டு வடக்கில் இரண்டாம் மொழியறிவை விருத்தி செய்ய இந்து பௌத்த கலாசார பேரவை திட்டமிட்டுள்ளது. அத்துடன் இம் மாணவர்களுக்கான கற்பித்தல் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக் கற்கைநெறிகளுக்கான நிதி அனுசரணையை தேசமானிய M.T.S இராமச்சந்திரன் அவர்கள் அவர்களுடைய சர்வதேச சட்ட நிறுவனத்தில் இருந்து வழங்கி வருகின்றார். இதுவரை இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பத்து வருட காலங்களில் 120 மணித்தியாலங்கள் இரண்டாம்மொழி கற்கைநெறியினை பூர்த்தி செய்துள்ள 19000 மாணவர்களுள் திறமை அடிப்படையில் நூற்றுக்கு ஒருவர் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்டு ஆசிரியர்களுக்கு ஈடான மொழியியல் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் 2020ம் ஆண்டுக்கான 120 மணித்தியால சிங்கள, ஆங்கில மொழி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கைநெறிகளை மேற்கொள்ள விரும்புவோர் கீழ்க் காணப்படும் தங்களது மாவட்டத்தில் உள்ள இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு ஜனவரி 31 ம் திகதி வரை தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணப்படும் தலைமைக் காரியாலய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 120 மணித்தியாலங்கள் இக் கற்கைநெறிகள் அரச பாடசாலைகளில் சனி, ஞாயிறு கிழமைகளில் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டம்

கொக்குவில் இந்துக்கல்லூரி -077 334 2479. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி -076 326 5557 புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி -076 435 3482. நெல்லியடி மத்திய கல்லூரி -077 656 0499 சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி- 076 670 4258. வட்டு.மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, சண்டிலிப்பாய் மத்திய கல்லூரி - 077 844 6094, உடுத்துறை ம.வி.-077 522 4840 மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி -077 859 7731

கிளிநொச்சி மாவட்டம் - 077 204 5028, முல்லைத்தீவு மாவட்டம் - 077 917 4967
மன்னார் மாவட்டம் - 076 940 9522, வவுனியா மாவட்டம் - 077 515 5313

தலைமைக் காரியாலயம்
077 271 1181, 076 181 4183, 011 714 0505

(சி-8884)

# முல்லைத்தீவிலுள்ள பின்தங்கிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் சீர்படுத்தப்படவில்லை

## பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் 18.கி.மீ.தூரம் நடந்து செல்லும் அவலம்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு அம்பாள்புரம் ஆறாம்கட்டை ஆகிய பகுதிகளுக்கான உரிய போக்குவரத்து வசதிகள் இன்றியும் பாதைகள் புனரமைக்கப்படாமையினாலும் 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 18 கிலோமீற்றர் தூரம் கால்நடையாக பாடசாலைக்குச் சென்று வருகின்ற பரிதாபகரமான நிலை காணப்படுகின்றது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படுகின்ற அம்பாள்புரம் ஆறாம்கட்டை கொல்லவிளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதியின்மை, பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் இப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியில் உள்ள பாடசாலை ஆரம்ப பாடசாலையாக காணப்படுவதனால் தரம் 5 இற்கும் மேற்பட்ட வகுப்புக்களில் கல்வி கற்கும் சுமார் 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்பது கிலோமீற்றர் தொலைவில் உள்ள வன்னிவிளாங்குளம் மற்றும் 15 கிலோமீற்றர் தொலைவில் மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடாசலைகளில் தமது கல்வியை தொடர்கின்றனர்.

இவ்வாறான நிலையில் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையாமல் குறித்த மாணவர்கள் மேற்படி கிராமங்களிலிருந்து ஒன்பது கிலோமீற்றர் தொலைவில் உள்ள வன்னிவிளாங்குளம் வரை கால்நடையாகவே



பாடசாலைக்குச் சென்று தமது கல்வியை கற்று பின்னர் பாடசாலை முடித்து பிற்பகல் ஒன்பது கிலோமீற்றர் தூரம் கால்நடையாக வீடுகளுக்கு திரும்பிச் செல்கின்றனர்.

மேற்படி மாணவர்களின் போக்குவரத்துப்பிரச்சினை தொடர்பில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மட்டத்தில் பிரதேச மக்களால் தெரியப்படுத்தப்பட்டபோதும் தீர்வு கிடைக்கவில்லை என பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 18 கிலோமீற்றர் தூரம் கால்நடையாகச் சென்று கல்வி கற்று வரும் நிலையினை கருத்தில் கொண்டு தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு இப்பகுதி பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## வவு.போக்குவரத்து பிரிவிற்கு பொலிஸ் பொறுப்பதிகாரி நியமனம்



(நெளுக்குளம்)

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராக பணியாற்றிய காமினி திஸாநாயக்க போக்குவரத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பதவியுயர்வு பெற்று நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய அசோக பிரியந்த கடந்த மாதம் குருநாகல் பகுதிக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (9-299)

## வவுனியாவில் மார்கழி இசை விழா







(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச கலாசார பேரவையும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து கலாபூஷணம் திருமதி தேவிமனோகரி கனகேஸ்வரன் நினைவாக நடத்திய மார்கழி இசை விழா நிகழ்வு நேற்று வவுனியா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓய்வுநிலை அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் கனகேஸ்வரி கந்தையா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலைமாமணி இ.சிவசோதி, திருமதி வேல்விழி சூரியகுமார் மற்றும் திருமதி சிவசோதி தங்கரட்ணம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், கல்விக்கான நிதி உதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன், நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராஜா, கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## துணுக்காய் பிரதேசத்தில் மணல் அகழத்தடை



(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்விற்கான அனுமதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் திருமதி.ச.லதுமீரா தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அதிகரித்துள்ள மணல் அகழ்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வு நடைபெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பிரதேச செயலகம் மணல் அகழ்விற்கான அனுமதிகளை வழங்குவதில்லை. அவ்வாறு மணல் அகழ்வுகள் நடைபெற்றால் அவை சட்டவிரோதமானவை.

வீட்டுத் திட்டத்திற்காக பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அனுமதி மட்டும் வழங்கப்படுகிறது.

எமது பிரிவில் வீடுகள் அமைக்கத் தொடங்கி வேலைகள் முற்றுப் பெறாத வீடுகளுக்கான நிதி வரவை எதிர்பார்த்துள்ளோம். நிதியினை பிரதேச செயலகம் பெற்றுக் கொடுப்பதன் மூலமே வீட்டுத்திட்டப் பயனாளிகள் வீடுகளை முழுமையாக அமைக்க முடியும்.

இது தொடர்பாக இறுதியாக நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (9-350)

## அறநெறி பாடசாலை ஆரம்பித்து வைப்பு!



(குருமன்காடு)

வவுனியா பட்டைக்காடு சீதா சமேத இராமர் ஆலயத்தில் புதிய அறநெறி பாடசாலை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய பரிபாலன சபைத்தலைவரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அறநெறி ஒன்றியத்தின் பொருளாளர் செல்வி சுஜித்தா சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் ஆலய செயலாளர், நிர்வாகத்தினர், அறநெறி ஆசிரியர்கள், அறநெறி மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (9-250)

## வவு.மாவட்ட தேவைகள் குறித்து ஆராய்வு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. அரச அதிபர் எம்.கனீபாவின் ஒழுங்குபடுத்தலில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது வவுனியாவின் நான்கு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் வவுனியா நகரம் மற்றும் உப நகரங்களுக்குட்பட்ட முக்கிய வீதிகள் புனரமைக்கப்படுவது, விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏதுவான குளங்களை புனரமைத்தல்,

பொதுமக்கள் வருமானத்தை ஈட்டும் பொருட்டு மீன் குஞ்சுகளை நன்னீர் குளங்களில் விடுதல், கூட்டுறவு திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனியா வடக்கு மற்றும் செட்டிகுளத்தில் அமைக்கப்பட்டு இயங்காத நிலையில் உள்ள ஆலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வது மற்றும் மாவட்டத்தில் தற்போது தேவையாகவுள்ள 8 ஆயிரம் வீடுகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அதிபரால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இவற்றிற்கான திட்ட முன்மொழிவுகளை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக வழங்குமாறு தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தின் போது அந்தந்த அமைச்சுகளினூடாக அவற்றை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருமதி அருந்தவநாயகி நவரட்ணராஜா



எமது சக விஞ்ஞான பாட ஆசிரியரும் தற்போது யா/குளமங்கால் றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியரும் யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியருமான திருமதி அருந்தவநாயகி நவரட்ணராஜா அவர்கள் 04.01.2020 அன்று காலமானார்.

**அறிவியல் யுகத்தின் ஆருயிரும்**
**அறிவுதனைப் பெருக்கிடும்**
**கல்லூரியின் ஆசானாய் பாரினிலே வாழ்ந்து**
**இறைவன் கருணையினால்**
**இறைபதம் விரைந்தீரோ யாமறியோம்**

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

(C-8885)

**வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரியர்கள்.**

---

வடமராட்சி கிழக்கில் தொடரும்

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க விசேட பொலிஸ் குழு களமிறக்கம்!

(கரணவாய்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு 30 பேர் கொண்ட விசேட பொலிஸ் குழு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு களமிறக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் அண்மைக் காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழி நடத்தலுக்கு அமைய காங்கேசன்துறைப் பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பேர் கொண்ட பொலிஸ் அணி ஒன்று மேற்படி பகுதிகளில் சுற்றுரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (இ-60)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

# 31 ம் நாளில் நினைவு கூருகின்றோம்



யாழ்.கோப்பாய்
மகா/ வித்தியாலயத்தில் விசேட
கல்வி ஆசிரியராக கடமையாற்றும்
திரு.றோ.சிவபுத்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**
**ஜோதிமலர்**
**றோயிஸ் நேசரட்ணம்**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவில்
அவரின் குடும்பத்துடன் நாமும்
துயரினைப் பகிர்ந்து கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விசேட கல்விப் பிரிவு,**
**யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**


(சி-8885)

---

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 10.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
## வல்லிபுரம் கந்தையா



**அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.01.2020 இன்று வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடவத்தை, துன்னாலை தெற்கு,**
**கரவெட்டி.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**


(1799)

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சுப்பிரமணியம் கனகரட்ணம்

**பிறப்பு: 02.10.1943**
**இறப்பு: 21.12.2018**



ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் சோகம் அப்பா
வசந்த காலத்தில் நீங்கள் விட்டுச்
சென்ற தடயங்கள் எம் வாழ்வில்
பொன்னான ஏணிப்படிகள்
அழகான அற்புதமான
தருணங்கள் அப்பா
எம் உயிர் உள்ளவரை உங்களின்
அன்பு ஆன்மா நின்று வழி
நடத்தும் அப்பா

என்றும் ஈரவிழிகளுடன்

மனைவி, மகன்மார்,
மகள்மார், மருமகன்மார்,
மருமகள்மார், பேரப்பிள்ளைகள்

தகவல்: மனைவி
தொ.இ: 077 635 1773

(சி-8878)

# பாடசாலை மாணவர்களை ஏற்ற மறுக்கும் பேருந்துகள் மீது சட்ட நடவடிக்கை



(கிளிநொச்சி)

பாடசாலை மாணவர்களை ஏற்ற மறுக்கும் பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.செவ்வேள் தெரிவித்துள்ளார்.

பாடசாலை சீருடையில் பேருந்திற்காக காத்திருக்கின்ற மாணவர்களை பல பேருந்துகள் ஏற்றிச் செல்வதில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தமது சேவைத்தூரத்தினை கருத்தில் கொள்ளாது அனைத்து பேருந்துகளும் மாணவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும். அவ்வாறு மாணவர்களை ஏற்றத்தவறும் பட்சத்தில் பேருந்து உரிமையாளர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு நிறைவான சேவையை வழங்கும் வகையில் மேலதிகமாக இரு பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (9-10)

# வவுனியா வடக்கில் 12 வீதிகளுக்கு காப்பெற்

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 12 வீதிகள் காப்பெற் வீதிகளாக புனரமைப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலர் த.தர்மேந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சுனுனு வீதி திணைக்களத்தினர், பிரதேச சபையினர், கிராம மட்ட அமைப்புக்கள், கிராம உத்தியோகத்தர்கள், வீதிப் புனரமைப்பு ஒப்பந்தகாரர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா வடக்கில் உள்ள 65 கிலோ மீற்றர் உடைய 12 பிரதான வீதிகள் 200 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர். (9)

# நல்லிணக்க கலந்துரையாடல்



(முறிகண்டி)


தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இன நல்லிணக்க கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

தெற்கையும் வடக்கையும் இணைத்து இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் குறித்த வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த 24 அங்கத்தவர்கள் பூநகரிக்கு அழைத்து வரப்பட்டனர். பூநகரி மக்களின் அடிப்படை மற்றும் சமூக அரசியல் ரீதியான பிரச்சினைகளை சகோதர இனத்தவர்களுக்கு அறிய வைக்கும் வகையிலும், அங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை இங்கு உள்ள மக்கள் அறிந்து கொண்டு தமக்குள்ளே புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிக்கு வருகை தந்த காலி மற்றும் மாத்தறை மாவட்ட மக்களை பூநகரி மக்கள் வரவேற்றனர். தொடர்ந்து இரு தரப்பினரும் தத்தமது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. குறித்த செயற்றிட்டம் இரு நாட்கள் இடம் பெற்றுள்ளது. (9-100)





**கிளிநொச்சி மாவட்டத்தில் தாய், தந்தையரை இழந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட 52 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட தனியார் வான் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் உள்ள நலன் விரும்பிகள் இருவரின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் ஒரு மாணவிக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றும் வழங்கப்பட்டது.**




க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கடந்த வருடம் தோற்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் வணிகப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி இரவிச்சந்திரன் யாழினியின் பல்கலைக்கழக கல்விக்காக சுமார் 20 பேர் இணைந்து 5 இலட்சம் ரூபா தொகையினை வழங்கி வைத்தனர். குறித்த நிகழ்வு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் நல்லையா அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்றது. வலயக்கல்விப் பணிப்பாளர் மாணவிக்குரிய காசோலையை சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைத்தார். இவ் நலத்திட்டத்தை லண்டன் வாழ் புலம்பெயர் உறவுகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# சர்வமதக் குழுக் கூட்டம்






(மன்னார்)

மத ரீதியாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள சர்வமதக்குழு பிரதிநிதிகளை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச சர்வமத குழுக் கூட்டம் நேற்று முன்தினம் தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் அதன் பிராந்திய இணைப்பாளர் எம். உவைஸ் தலைமையில் தொடர்பாடலுக்கான மையத்தின் அலுவலர் ஜோண்சனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.

பன்மைத்துவம் மற்றும் நீதியின் ஆதிக்கம் ஆகியவற்றை பலப்படுத்துவதன் மூலம் சமய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற மத ரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு புரிந்துணர்வு மூலம் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக கலந்தாலோசிக்கும் முகமாக குறித்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு சர்வமதத் தலைவர்கள் உட்பட அரச அலுவலர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (9-285)

# உணவக உரிமையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை





(குருமபுரம்)

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் இயங்கிவரும் சுமார் 30 உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குமான இரு நாட்கள் பயிற்சிப் பட்டறை நேற்று முன் தினமும் நேற்றும் இடம் பெற்றது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப்பட்டறையில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளர் சரவணபவான், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி கஜேந்திரன், உணவு மருந்து பரிசோதகர் இராயேந்திரா, மற்றும் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு சுகாதாரமான உணவுப் பழக்கம் தொடர்பாக கருத்துரைகளை வழங்கியிருந் தனர்.

பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட வர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. (9-316)

# 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பலன்கள்

## 01.01.2020 - 31.12.2020

# தன்னம்பிக்கைக்கு தக்க பலன் கிடைக்கும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



இந்தப் புத்தாண்டு உங்கள் இராசியிலேயே பிறக்கிறது. உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் சூரியன், புதன், வியாழன், கேது, சனி ஆகிய 5 கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. சப்தமாதிபதி சூரியன், பஞ்சம அஷ்டமாதி பதியான புதன், தனலாபாதிபதியான குரு, இராசிநாதன் மற்றும் விரயாதிபதியான சனி ஆகியவற்றோடு பாம்புக் கிரகமான கேதுவும் இணைவதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். விரயாதிபாதியான சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சுப விரயங்கள் இந்த ஆண்டில் கூடுதலாக இருக்கும்.

புத - ஆதித்ய யோகம் மற்றும் செவ்வாய் பலமும் சிறப்பாக உள்ளதால், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்கள் வருடத் தொடக்கத்திலேயே நடைபெற தொடங்கும். உடன் பிறப்புகளோடு ஏற்பட்ட உரசல்கள் மாறும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சப்தமாதிபதியோடு குரு கூடியிருப்பதால் குடும்பத்தில் மங்கள ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகலாம். இதுவரை வாசல் தேடி வந்த வரன்கள் விலகிச் சென்றிருக்கலாம். அவை மீண்டும் வந்து மகிழ்ச்சிப்படுத்தும். கேது மற்றும் ராகு ஆகிய இரண்டு பாம்புக்கிரகங்களுக்குள் செவ்வாய் நீங்கலாக மற்ற அனைத்து கிரகங்களும் வீற்றிருப்பதால், ஆண்டின் தொடக்கத்திலேயே நீங்கள் சர்ப்ப சாந்தி பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது. அப்பொழுதுதான் ஏற்ற இறக்கம் இல்லாத வாழ்க்கை உங்களுக்கு அமையும்.

**இலாப குருவின் சஞ்சாரம்**

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான், உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 11 ஆம் இடம் என்பது இலாப ஸ்தானமாகும். அதே குரு பகவான் 2 ஆம் இடத்திற்கும் அதிபதியாவார். 2 ஆம் இடம் என்பது தன ஸ்தானம். எனவே தனலாபாதிபதியாக விளங்கும் குரு பகவான் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது கடன் சுமை குறையும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிக்கு நண்பர்களும் உறவினர்களும் வழிகாட்டுவர். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களில் பதிகிறது. அந்த இடங்களுக்கு உரிய பலன்கள் எல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறும். பஞ்சம ஸ்தானம் என்பது புத்திர ஸ்தானமாகும். எனவே புத்திரப்பேறுக்காக எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அது கிடைக்கலாம். பிள்ளைகளுக்கு திருமணம் கைகூடும். படிக்கும் பிள்ளைகளாக இருந்தால் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லும் யோகம் வாய்க்கும். அவர்களால் உதிரி வருமானங்களும் உண்டு.

சப்தம ஸ்தானத்தை குரு பார்ப்பதால், களத்திர வகையில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கூட்டு முயற்சியில் இலாபம் கிடைக்கும். வெளிநாட்டு வணிகம் செய்பவர்களுக்கு ஆதாயம் உண்டு. பெற்றோர்களின் மணிவிழா, முத்து விழா, பவளவிழா போன்ற விழாக்கள் நடைபெறும். சுபச் செலவுகளும் ஏற்படும்.

9 ஆம் இடத்தில் குரு பார்வை பதிவதால், அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். தந்தை வழி சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். பங்காளிப் பகை மாறும். பெற்றோர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியிலேயே குருவும் சனியும் வக்கிரம் பெறுகிறார்கள். எனவே, வீடு மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம், நாடு மாற்றம் போன்றவை வரலாம். தசாபுத்தி பலம் பெற்றவர்கள் இந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் சனிப்பெயர்ச்சிக்கு பிறகு மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள்.

15.11.2020 இல் மகர இராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகி செல்கிறார். அப்பொழுது அதன் பார்வை 4, 6, 8 ஆகிய ஸ்தானங்களில் பதிகிறது. தாய்வழி ஆதரவு கிடைக்கும். தட்டுப்பாடுகள் அகலும். நோய் நொடியில் இருந்து குணமாவீர்கள். நோக்கமறிந்து செயற்படும் பணியாளர்கள் உங்களுக்கு அமைவர். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வருங்காலத்தைப் பற்றிய பயம் அகலும். இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். எல்லை தாண்டி பழகியவர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் இனி அகலும்.


**ராகு - கேது பெயர்ச்சிக் காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் கேது பகவான் சஞ்சரிக்கிறார். 5 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கிறார். 1.9.2020 இல் இந்த இரு கிரகங்களும் பெயர்ச்சியாகின்றன. பின்னோக்கிச் செல்லும் இந்த இரண்டு கிரகங்களும் முன்னோக்கிச் செல்ல வழிகாட்டும். இந்தப் பெயர்ச்சியின் படி 10 ஆம் இடத்திற்கு வரும் கேதுவால், தொழிலில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் இலாகா மாற்றங்கள் வரலாம். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய், அவரது வீட்டில் கேது சஞ்சரிக்கப் போவதால், சகோதரர்களால் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வரும். பத்திரப் பதிவிலிருந்த தடைகள் அகலும்.

4 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அது சுக்கிரன் வீடாகும். அது சுக ஸ்தானமாக கருதப்படுகிறது. அதேபோல் 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக சுக்கிரன் விளங்குகிறார். எனவே உங்களுக்கு பெண்களால் பெருமை சேரும். வாழ்க்கைத்துணை வழியே நல்ல தகவல்கள் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்வி மற்றும் தொழில் சார்பில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**சனிப் பெயர்ச்சி காலம்**

உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வரும் சனி பகவான் 29.4.2020 முதல் 14.9.2020 வரை தனுசு இராசியில் சனி வக்கிரம் பெறுகிறார். 13.2.2020 முதல் 22.3.2020 வரை செவ்வாய்-சனி சேர்க்கை ஏற்படுகிறது. 3.5.2020 முதல் 17.6.2020 வரை தனுசு இராசியில் இருக்கும் சனி, கும்பத்தில் உள்ள செவ்வாயைப் பார்க்கிறார். இக்காலத்தில் தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். தன்னிச்சையாக செயற்பட முடியாது. தனவரவில் திருப்தி ஏற்படாது. இராசிநாதன் வலிமையிழந்து இருக்கும் இந்த நேரத்தில் எதைச் செய்தாலும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபடுங்கள்.




26.12.2020 இல் விரய ஸ்தானத்திற்கு செல்கிறார். இப்பொழுது ஏழரைச் சனி தொடங்கப் போகிறது. அதற்காக நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் இராசிநாதனாக சனி இருப்பதால், பெரிய அளவில் பாதிப்புகளை கொடுக்க மாட்டார். திடீர் திடீரென்று மாற்றங்கள் வந்து சேரும். ஒரு தொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை கையில் கிடைக்கும். விரயச் சனியாக இருப்பதால், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்யுங்கள்.

**செல்வ வளம் தரும் வழிபாடு**

சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து விநாயகர், சனி பகவான், ஆஞ்சநேயர் ஆகிய மூன்று தெய்வங்களையும் வழிபாடு செய்யுங்கள். மேலும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகிலுள்ள வைரவன்பட்டியில் உள்ள மார்த்தாண்ட வைரவர், வடிவுடையம்மன், வளர்ஒளிநாதர், அதிகார நந்தி, தென்முகக்கடவுள் ஆகியவற்றை யோக பலம் பெற்ற நாளில் சென்று முறையாக வழிபட்டு வந்தால், முன்னேற்றம் அதிகரிக்கும்.

**குருவின் வக்கிர காலமும் பரிவர்த்தனை யோகமும்**

27.3.2020 முதல் மகர இராசிக்கு குரு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு 7.7.2020 வரை இருக்கிறார். அதே நேரத்தில் தனுசு இராசியில் இருக்கும் சனியும் வக்கிரம் அடைகிறார். இருவரும் தங்களின் இருப்பிடங்களை மாற்றிக்கொண்டிருப்பதால், பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். 'பரிவர்த்தனை யோகம்' என்பது யோகங்களில் சிறந்த யோகமாகும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் சனி பகவான் குரு வீட்டிலும் தனலாபாதிபதியான குரு சனி வீட்டினும் இருப்பதால் இரண்டு கிரகங்களுமே கெடுபலனைக் கொடுக்காது. பொதுவாக தனலாபாதிபதி விரய ஸ்தானத்திற்கு வருகிறார். விரயாதிபதி ஆதிபத்தியம் பெற்ற சனி லாப ஸ்தானத்தில் இருக்கிறார். எனவே விரயத்திற்கேற்ற இலாபம் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த புத்தாண்டில் பணப் புழக்கம் அதிகரிக்கும். கூட்டுக்கிரக யோகத்தோடும், புத - ஆதித்ய யோகத்தோடும் இந்தப் புத்தாண்டு பிறப்பதால், குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும்.

கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கனிவும் பாசமும் கூடும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். தாய்வழி ஆதரவும், சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பும் எதிர்பார்த்தபடியே சிறப்பாக இருக்கும். சொத்துக்கள் மற்றும் நகைகள் வாங்கும் யோகம் உண்டு. சொந்த பந்தங்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கேட்காமலேயே கிட்டும். கேட்டுப்பெற வேண்டிய சலுகைகளை கேட்டுப் பெறுவீர்கள். புனித ஸ்தலங்களுக்குச் சென்று வரும் யோகமும் உண்டு. குலதெய்வ வழிபாடுகளை முறையாகச் செய்வதோடு பிரதோஷ காலத்தில் நந்தியை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# பாரதம்

## நிர்பயா கொலை வழக்கு விவகாரம்; தூக்குத்தண்டனை திகதி அறிவிப்பு



(டில்லி)

இந்தியாவின் டில்லியில் கடந்த 2012 டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி மருத்துவ மாணவி நிர்பயா ஓடும் பஸ்ஸில் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே தள்ளி விடப்பட்டார்.

இதன் பின்னர் வைத்தியசாலையில் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வந்த நிர்பயா, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய டில்லி நிர்பயா வழக்கில் குற்றவாளிகள் 4 பேருக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 7 மணிக்கு குற்றவாளிகள் தூக்கிலிடப்படவுள்ளனர்.

குற்றவாளிகளான பவன் குப்தா, முகேஷ், வினய் சர்மா, அக்சய் குமார் சிங் ஆகிய 4 பேர் இவ்வாறு மரண தண்டனையை நிர்பயா வழக்கில் எதிர்கொள்ளவுள்ளனர். (ஐ-2)

## அவுஸ்திரேலியாவில் நிலவும் கடும் வெப்பநிலை! 10 ஆயிரம் ஒட்டகங்களை கொல்வதற்கு உத்தரவு



(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகின்ற நிலையில் முழு நாடுமே திண்டாட்டத்தை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டிலுள்ள ஒட்டகங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் அதிகளவு நீரை அருந்துவதைத் தடுத்து நிறுத்த அங்குள்ள 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஒட்டகங்களைக் கொல்லும் நடவடிக்கை நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

அனன்கு பிட்ஜன்ட்ஜட்ஜாரா யன்குனிட்ஜட்ஜாரா பிராந்தியத்தைச் சேர்ந்த உள்ளூர் தலைவர்கள் ஒட்டகங்களைக் கொல்வதற்கான இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர். இதற்காக உலங்குவானூர்திகளில் உத்தியோகபூர்வமாக துப்பாக்கிச் சூட்டை நடத்துபவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டகங்களைக் கொல்லும் இந்த நடவடிக்கை சுமார் 5 தினங்களுக்கு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-2)

## ஈராக்கில் போர்ப்பதற்றம்; இந்தியர்கள் செல்லவேண்டாம்

### மத்திய அரசு எச்சரிக்கை

(டில்லி)

ஈராக்கில் போர் பதற்றம் அதிகரித்திருப்பதால், இந்தியர்கள் அங்கு செல்ல வேண்டாம் என மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் இராணுவத் தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டார். ஈரானில் உள்ள 52 முக்கிய இடங்களில் தாக்குதல் நடத்துவோம் என அமெரிக்கா சவால் விடுத்தது. அமெரிக்காவின் செயல்களுக்கு பழி தீர்ப்போம் என ஈரானும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தது.

அதன்படி ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகளை குறிவைத்து, ஈரான் 12 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருவதால் போர் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. இதையடுத்து ஈராக் நாட்டுக்கு செல்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

'போர் பதற்றம் நிலவுவதால் ஈராக், ஈரான் மற்றும் வளைகுடா வான் பகுதியை இந்திய விமானங்கள் பயன்படுத்த வேண்டாம். மறு உத்தரவு வரும் வரை, இந்தியர்கள் எந்தவித அத்தியாவசிய தேவையில்லாமல் ஈராக் நாட்டிற்கு செல்ல வேண்டாம்.

ஈராக்கில் உள்ள இந்தியர்கள் எச்சரிக்கையாக இருங்கள். ஈராக்கினுள் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு பக்தாத், ஏர்பிலில் உள்ள தூதரகங்கள் தொடர்ந்து உதவிகளை செய்யும்' என வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-2)

## போதைப்பொருள் கடத்தல் விவகாரம்; தென்னாபிரிக்க பெண்ணுக்கு 10 வருடங்கள் சிறை

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்க பெண்ணுக்கு போதைப்பொருள் தொடர்பான வழக்கு விசாரணை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள போதைப்பொருள் தடுப்பு பிரிவு சிறப்பு நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்க பெண்ணான மொலிபிக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழகத்துக்கு போதைப் பொருட்களைக் கடத்தி வருவது தொடர்கதையாகவே இருந்து வருகிறது. பொலிஸார் அவ்வப் போது அதிரடி வேட்டையில் ஈடுபட்டு வெளிநாட்டு கடத்தல் காரர்களை கைது செய்து வருகின்றனர். அந்த வகையில் தென்னா பிரிக்க பெண்ணுக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## அமெரிக்காவின் வி
## ஈரான் 9 தடவைக

### 80 அமெ.படையினர் உயி

(பக்தாத்)

**ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கா விமானப்படைத் தளம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்கு அடுத்தடுத்து ஒன்பது தடவைகளுக்கு மேல் இ மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் 80 அமெ உயிரிழந்துள்ளனர்.**

அத்துடன், இத்தாக்குதலை அமெரிக்காவின் தலைமையகமான பென்டகன் உறுதிசெய்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவின்படி, அண்மையில் பக்தாத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் ஈரானின் முக்கிய தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அல்-ஆசாத் மற்றும் இர்பிலில் குறைந்தது தங்களின் இரண்டு நிலைகள் மீது தாக்குதல் நடந்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அலுவலகமான பென்டகன் அமைப்பு கூறியுள்ளது. இந்த நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகையின் பெண் செய்தி தொடர்பாளரான ஸ்டாபானி கிரிஷம்,

'ஈராக்கில் உள்ள அமெரிக்க நிலைகள்

## ஈரானில் விழுந்து நொறுங்கி
## 180 பயணிகள் பரிதாபப

(டெஹ்ரான்)

ஈரான் தலைநகர் டெஹ்ரானிலிருந்து 180 பயணிகளுடன் புறப்பட்ட உக்ரேய்ன் விமானம் கீழே விழுந்து நொறுங்கியது.

ஈரான் - அமெரிக்கா இடையே போர் .பதற்றம் நிலவி வரும் நிலையில், 180 பேருடன் சென்ற உக்ரேய்ன் நாட்டு விமானம் ஈரானின் தலைநகர் டெஹ்ரான் விமான நிலையம் அருகே கீழே விழுந்து நொறுங்கியது.

ஈரானில் இருந்து உக்ரேய்ன் தலைநகருக்கு நேற்று அதிகாலை புறப்பட்ட போயிங் 737 ரகத்தைச் சேர்ந்த அந்த

## சுலைமானின் இறுதி உ
## சனநெரிசலில் சிக்கி 50



(பெர்லின்)

அமெரிக்க ட்ரோன் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ உயர் தளபதியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் நெரிசலில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 48 இற்கும் மேற்பட்டோர் காயம

# வெளிநாடு

# ா விமானப்படைத்தளம் மீது

# வகளுக்குமேல் தாக்குதல்!

## உயிரிழப்பு


**மெரிக்காவின் அல் ஆசாத் த் தாக்குதல் நடத்தியதுடன் மல் இவ்வாறு தாக்குதல் 80 அமெரிக்கப் படையினர்**

ள்ளது. குறை ள் மீது க பாது மைப்பு குறித்து ளிகை ா ஸ்டா லைகள்

மீது தாக்குதல் நடந்ததாக வரும் செய்திகள் குறித்து எங்களுக்குத் தெரியும். இது குறித்த தகவல்கள் ஜனாதிபதி ட்ரம்புக்கு விபரிக்கப்பட்டுள்ளது.

தற்கால சூழலை உன்னிப்பாக கண்காணித்து வரும் ஜனாதிபதி நாட்டின் தேசிய பாதுகாப்புக் குழுவுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.


இது குறித்து அறிக்கை ஒன்றி



னையும் ஈரானின் அரசு செய்தி முகமையான ஐ.ஆர்.என்.ஏ. வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 'அமெரிக்காவின் பயங்கரவாத இராணுவத்துக்கு தங்களின் படைத் தளங்களைத் தந்துள்ள அதன் நேச நாடுகள் அனைத்தையும் நாங்கள் எச்சரிக்கிறோம். ஈரான் மீதான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு ஆரம்பப்புள்ளியாக அமையும் எந்த ஒரு பிராந்தியத்தின் மீதும் குறி வைக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

## அவுஸ்திரேலிய காட்டுத்தீயிற்கு கொஞ்சம் ஓய்வு கொடுத்த மழை



(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் தீவிரமடைந்துவரும் ஆபத்தான காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஆயிரக்கணக்கான தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்ற நிலையில், அவர்களின் போராட்டத்திற்கு பாதி அளவேனும் ஆறுதல் அளிப்பதற்காக அங்கு மழை பெய்துள்ளது.

இந்த மழையால் ஓரளவு வெப்பம் தணிந்துள்ள போதிலும் காட்டுத்தீ முற்றிலுமாக பரவுவது தடைப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலோரப் பகுதியில் உள்ள சிட்னியில் இருந்து மெல்பேர்ன் வரை மிதமான மழையும் நியூசௌத் வேல்ஸ் மாகாணத்தின் சில பகுதிகளில் கன மழையும் பெய்துள்ளது.

ஆனால், நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் வெப்பம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதுமட்டுமல்லாது, விக்டோரியா மற்றும் நியூசௌத் வேல்ஸ் மாகாணங்களில் பற்றி எரியும் காட்டுத்தீ ஒன்றாகச்சேர்ந்து பெருந்தீயாக உருவாகலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மழை பெய்து சற்று வெப்பம் தணிந்துள்ள போதிலும், காற்று மாசு அபாயகர நிலையில்தான் உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-2)

# ுங்கிய விமானம் ாபமாகப் பலி!

ற உக் தலை அருகே தலை ப்பட்ட அந்த

விமானம் (பி.எஸ் 752) சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து நொறுங்கியது. தொழில்நுட்ப காரணங்களால் விமானம் விபத்தில் சிக்கியதா? அல்லது தாக்கப்பட்டதா? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ-2)

# பெருவில் கோர விபத்து; 16 பேர் உடல் நசுங்கிப் பலி



## 42 பேர் படுகாயம்

(லிமா)

பெரு நாட்டில் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்த பேருந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான பெருவின் தலைநகர் லிமாவில் இருந்து சுற்றுலா நகரமான அரேகிப்பாவுக்கு அடுக்கு மாடி பேருந்து ஒன்று புறப்பட்டுச் சென்றது.

இந்தப் பேருந்தில் அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உட்பட 60 பேர் பயணம் செய்தனர்.

அரேகிப்பா நகரில் உள்ள ஒரு சாலையில் பேருந்து வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

அப்போது ஒரு வளைவில் திரும்பியபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மீது பயங்கரமாக மோதியது.

இதில் நிலைதடுமாறிய பேருந்து சாலையில் கவிழ்ந்து, உருண்டது.

இந்தக் கோர விபத்தில் சுற்றுலாப் பயணிகள் 16 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். 42 பேர் படுகாயம் அடைந்தனர். (ஐ-2)

# தி ஊர்வலம்; 50 பேர் பலி



ாண்ட உயிரி காயம

டைந்தனர். காசிம் சுலைமானின் உடல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை அடக்கம் செய்யப்படவிருந்தது. இந்த உயிரிழப்புக்கள் காரணமாக உடல் அடக்கம் பிற்போடப்பட்டுள்ளது.

சுலைமானின் சொந்த ஊரான கேர்மனில் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. ஈரானிய இராணுவத் தளபதியின் கொலை அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் குறித்த அச்சத்தை எழுப்பியுள்ளது.

ஈரானின் அதியுயர் தலைவர் அயதொல்லாஹ் அலி கமேனிக்கு அடுத்த நிலையில் இரண்டாவது சக்திவாய்ந்த மனிதராக காசிம் சுலைமான் கருதப்பட்டார். எனினும் அமெரிக்கா அவரை ஒரு பயங்கரவாதியாகவும் அமெரிக்கத் துருப்புக்களுக்கு அச்சுறுத்தலாகவும் கருதியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# அமெரிக்காவும் ஈரானும் அமைதி காக்க வேண்டும்

## உலக நாடுகள் வலியுறுத்து

(ஜெனிவா)

அமெரிக்காவும் ஈரானும் அமைதி காக்க வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்காவின் அல் ஆசாத் விமானப்படைத் தளம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

அடுத்தடுத்து ஒன்பது தடவைகளுக்கு மேல் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவின்படி, அண்மையில் பக்தாத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் ஈரானின் முக்கிய தளபதி காசிம் சுலைமான் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே அமெரிக்காவும் ஈரானும் அமைதி காக்க வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

பதற்றத்தைத் தணிக்கும் பொருட்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்குமாறு சீனா அறிவுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான சீனத் தூதுவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இதேவேளை, அரச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைத் தொடர்புகொண்டு தங்கள் விபரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு, மத்திய கிழக்கு, வளைகுடா நாடுகளில் உள்ள தனது குடிமக்களுக்கு மலேசியா அறிவுறுத்தியது. (ஐ-2)

## மோதலின் உச்சம்

# ஈரான், ஈராக் வான்பரப்பில் அமெ.விமானங்களுக்குத் தடை

(பக்தாத்)

ஈரான், ஈராக் மற்றும் வளைகுடா நாடுகளில் அமெரிக்கப் பயணிகள் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவைப் பழி தீர்க்கும் வகையில், ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்க அல் ஆசாத் விமான படைத் தளம் மீது ஈரான் அடுத்தடுத்து 9 முறை ஏவுகணை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் சுமார் 12 ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதலை நடத்தியது.

இதனால் போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் ஈரான், ஈராக் மற்றும் வளைகுடா நாடுகளில் அமெரிக்காவின் பயணிகள் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# 70 புதிய கட்சிகள் பதிவிற்காக விண்ணப்பம்!

(கொழும்பு)

**புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை இம்மாத இறுதியுடன் நிறைவு பெறவுள்ளது எனவும் 70 புதிய கட்சிகள் பதிவிற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இதேவேளை, சில கட்சிகளின் பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த கட்சிகள் கணக்கறிக்கையை சமர்ப்பிக்காததன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதிக்கு வாக்களிக்காதவர்கள் கூட இன்று ஆதரவு வழங்க ஆரம்பித்துவிட்டனர்

## அமைச்சர் டளஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதியின் செயற்பாடுகளைக் கண்டு அவருக்கு வாக்களிக்காதவர்கள்கூட இன்று ஆதவு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். "இன்று ஒட்டுமொத்த நாடும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஏற்றுக் கொண்டுள்ளது.

அவருக்கு வாக்களித்தவர்களுடன், வாக்களிக்காதவர்களும் இவ்வாறான ஒரு தலைவர் நாட்டுக்கு கிடைத்தமையையிட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத் தலைவர் ஒருவர் மிகவும் சாதாரணமாக இருக்கிறார். அவர் நாடாளுமன்றுக்கும் இரண்டு வாகனங்களில்தான் வந்தார்.

ஆனால், முன்னாள் தலைவர்கள் அனைவரும் நாடாளுமன்றுக்கு வரும்போது குதிரைப்படைபுடை சூழ, வாகன அணிவகுப்பில்தான் வந்தார்கள். இந்த 7 வாரங்களில் எல்லாம் மாறிவிட்டது.

இந்தக் காலத்தில் பாதாளக் குழுக்கள் எங்கு போனது என்று கூடத் தெரியவில்லை. இந்தப் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமெனில், எமக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் கிடைக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2009 இற்கு முன் தமிழ் இளைஞர்களின் கையில் துப்பாக்கிதான் இருந்ததாம் - விமலவீர விசமம்

(கல்முனை)

2009 ஆம் ஆண்டிற்கு முன்பு தமிழ் இளைஞர்களின் கைகளில் பேனா இருக்கவில்லை. துப்பாக்கிதான் இருந்தது என வன ஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் இளைஞர்களைப் போன்றுதான் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் சிங்கள இளைஞர்களும் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இதனால் அறுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.



ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து நீங்கள் பெற்ற பயன் என்ன? நான் கிழக்கு மாகாண சபையில் கல்வியமைச்சராக இருந்தவேளை மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்திருக்கின்றேன்.

தற்போதைய ஜனாதிபதியைக் கொண்டு வந்தவர்கள் சிங்கள மக்கள். ஆனால் இப்போது தமிழர்களும் முஸ்லிம்களும் வேலை வாய்ப்புத் தாருங்கள், அபிவிருத்தி செய்து தாருங்கள் என்று இப்போது எம்மிடம் வருகிறார்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களித்து விட்டு வாருங்கள். அனைத்தையும் பெற்றுத் தருவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச அரசியல் போக்கு குறித்து யாழில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் சமகால சர்வதேச அரசியல் போக்கு என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சமூக செயற்பாட்டாளர் இ.ஸ்ரீகரன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் மத்திய கிழக்கில் உருவாகியுள்ள புதிய பதற்றமும் அதன் உலகளாவிய தாக்கமும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் இந்தியக் குடியுரிமைச் சட்டத் திருத்தமும் தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்பும் என்ற தலைப்பில் ஊடகவியலாளர் க.வேல்தஞ்சன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தொந்தி ஒரு தொல்லை

வாயிலே கொழுப்பு இருந்தாலும் பரவாயில்லை சேர் எப்படியாவது ஒரு வழியாகச் சமாளித்து விடலாம். ஆனால் வயிற்றிலே மட்டும் கொழுப்பு இருக்கக் கூடாது சேர். அப்படி இருந் தால் அதை அலட்சியமாகவும் விட்டு விடக்கூடாது.

சிலபேர் சொல்லுவார் கள்...எனக்குத் தொந்தி கிடையாது சேர். வேணும் என்றால் என் வயிற்றை அழுத்திப் பாருங்கள் கல்லு மாதிரியா இருக்கிறது என்று. வயிறு கல்லு மாதிரி இருந்தால் உள்ளே கொழுப்பு இல்லை என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. வயிற்றுத் தசைக்குக் கீழேயுள்ள கொழுப்பு சில வாத்தியங்களிலே இருக்குமே நரம்பு அது மாதிரி ரைட்டா இழுத்துக் கொண்டிருக்கும் என்று அர்த்தம். அதனாலே தொட்டுப் பார்த்தால் கல்லு மாதிரித்தான் இருக்கும். இருந்தாலும் தொந்தி தொந்திதான்.

வயிற்றிலே கொழுப்பு அதிகமாக இருக்கிறது சங்கடம்தான். அதனாலே கொலஸ்ரோல் அளவு அதிகமாகவும் இதய நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம் இது மாதிரி ரிஸ்க் அதிகம்.

ஒருவர் ஒல்லியாக இருக்கலாம். உடம்பு எடை அதிகமாக இல்லாமல் இருக்கலாம். அப்படி இருந்தால் கூட அவர் உடம்பிலே மற்றப் பகுதியை விட வயிற்றிலே கொழுப்பு அதிகமாக இருக்கும்! நாமதான் ஒல்லியாக இருக்கிறோமே நமக்கு ஒன்றுமில்லை என்று நினைக்கக் கூடாது.

சரி... நம்ம வயிறு இருக்க வேண்டிய அளவைவிட அதிகமாக இருக்கிறதா? இல்லையா? அதை எப்படிக் கண்டு பிடிக்கிறது? அதுக்கு சில வழி இருக்கிறது.

முதலிலே நீங்கள் நேராக நிமிர்ந்து நில்லுங்கள். உங்கள் பார்வையை மட்டும் கீழே தாழ்த்தி கால் விரலைக் கவனியு ங்கள். விரல் உங்களுக்கு தெரியுதா? அப்படியென்றால் உங்கள் வயிறு நோர்மல்தான். கால் விரல் உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா. அப்படி என்றால் உங்களுக்கு வயிறு பெரிதுதான் சேர். இன்னொரு வழி இருக்கிறது. ஒரு தரையிலே நிமிர்ந்து படுங்கள். ஒரு மீற்றர் நீளமுள்ள அளவு கோல் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். கழுத்து எலும்பிலே ஒரு பக்கத்தையும் இடுப்பிலே ஒரு பக்கத்தையும் வையுங்கள். படுக்கை வாட்டிலே வையுங்கள். அது நடுப்பகுதி...வயிற்றிலே முட்டித் தராசு மாதிரி ஆடுதா? அப்படி என்றால் உங்களுக்குப் பிரச்சினைதான்! மருத்துவ அறிவியல் ரீதியாக உங்களுக்குத் தொந்தியிருக்கிறதா? இல்லையா? என்று கண்டு பிடிக்கிறதுக்கு ஒரு வழி இருக்கிறது. உங்கள் இடுப்பிலே இடுப்பு அளவை வகுக்க வேண்டும். இந்த விகிதம் அதாவது ஆண்களுக்கு 0.95 இற்கு மேலே போகக் கூடாது. பெண்களுக்கு 0.85 இற்கு மேலே போகக் கூடாது. அப்படி போய்விட்டது என்றால் வயிறு பெருத்திருக்கிறது என்று அர்த்தம்.

சரி...இந்த தொந்தியைக் குறைக்கிறதுக்குப் என்ன செய்யலாம்? பட்டினி கிடக்கலாமா? அது தேவையில்லை. ஆனால் கலோரி அளவைக் குறைக்க வேண்டும். அது எப்படி? கொழுப்பு ஆகாரத்தைக் குறைக்க வேண்டும். அப்பொழுது காபோவைதரேற்று, புரோட்டினெல்லாம் இருக்கிறது அல்லவா...அதெல்லாம் ஒரு கிராமுக்கு 4 கலோரி கொடுக்கும். ஆனால் கொழுப்பு ஒரு கிராமுக்கு 9 கலோரி வித்தியாசம் இருக்கிறது. கலோரி அளவு குறைச்சலாகக் கொடுக்கக் கூடிய ஆகாரம் சாப்பிட வேண்டும்.

தொந்தியைக் குறைக்க அதிகளவு உடற் பயிற்சி தேவையா? தேவையில்லை. ஆகாரத்திலே கொழுப்பைக் குறைத்தால் போதும். மற்ற ஆகாரம் செரிக்க லேசான உடற் பயிற்சியே போதும். வயதைக் குறைக்கிறேன் என்று சொல்லி சிலபேர் உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருப்பார்கள். அதுவும் தேவையில்லையாம்! அப்படியெல்லாம் செய்து உங்களைக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாம்.

வயதைக் குறைக்கிறதுக்கு அது உதவுவதேயில்லை என்று அது சம்பந்தமான நிபுணர்கள் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக 1984 இலே ஒரு சோதனையே செய்து பார்த்தார்களாம். ஒரு நாளைக்கு 185 தடவை உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருக்கிறது. இது மாதிரி 27 நாட்கள் பயிற்சி செய்து விட்டுப் பார்த்தார்களாம். வயிற்றுக் கொழுப்பிலே எந்த மாறுதலும் இல்லையாம். அதனாலே உட்கார்ந்து எழுந்திருக்கிற வேலை வேண்டாம்.

தொந்தியைக் குறைக்க முயற்சி செய்கிறவர்கள் தோற்றத்தை அழகாக்கிறது ஒரு பக்கம் இருந்தாலும் ஆரோக்கியமான நீண்ட வாழ்வுக்கும் அவர்கள் அத்திபாரம் போடுகிறார்கள் என்று அர்த்தம். ஒருவர் வந்தார்... சேர் எனக்குத் தொந்தி இருக்கா? இல்லையா? என்று கண்டுபிடிக்கிறது கஷ்டமாக இருக்கிறது என்றார். சரி நான் கண்டு பிடிக்கிறேன். இப்படி தரையிலே காலை நீட்டி நிமிர்ந்து படுங்கள் என்றேன். படுத்தார். இப்ப உங்கள் கண்ணைத் திருப்பிக் கால் கட்டை விரலைப் பாருங்கள்... கட்டை விரல் தெரியுதா? என்று கேட்டேன். தெரியுது சேர் என்றார்.

நீங்கள் தெரிகிறது என்று சொல்வதை நான் எப்படி நம்புவது என்றேன். அதோ தெரிகிற அந்தக் கட்டை விரல் நுனியில ஒரு ஈ கூட உட்கார்ந்து இருக்கிறது பாருங்கள் சேர் என்றார். அப்படி என்றால் நீங்கள் பார்க்கிறது கட்டை விரல் இல்லை சேர். உங்கள் மூக்கு நுனி அங்கேதான் ஈ உட்கார்ந்திருக்கிறது என்றேன் நான்.

# கலால் வரிச்சட்டங்களை மீறிய 43 ஆயிரத்து 128 பேர் கைது!

## 180 மில்லியன் ரூபாய் அபராதம்

(கொழும்பு)

கலால் வரிச்சட்டங்களை மீறியமை குறித்து கடந்த வருடத்தில் மாத்திரம் 43 ஆயிரத்து 128 பேர் கைது செய்யப்பட்டனர்.

கலால் வரித்திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரத்து 252 பேர் பெண்கள் எனவும் குறிப்பிடப்பட்டது.

சட்டவிரோதமாக உள்ளூர் மற்றும் சர்வதேச மதுபானங்களை உற்பத்தி செய்தமை, தம்வசம் வைத்திருந்தமை, விற்பனை செய்தமை மற்றும் கொண்டு சென்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது 180 மில்லியன் ரூபாய்க்கும் அதிக தொகை அபராதமாக அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காட்டுத் தீயால் மோசமாக பாதிக்கப்பட்ட ஆஸிக்கு இலங்கைத் தேயிலையை இலவசமாக வழங்க நடவடிக்கை

## அந்நாட்டுப் பிரதமருடன் ஜனாதிபதி உரையாடல்

(கொழும்பு)

காட்டுத்தீயால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலியாவுக்கு இலங்கைத் தேயிலையை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.



அவுஸ்திரேலியா பிரதமர் ஸ்கொட் மொரிசனுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொலைபேசி மூலம் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்ததாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த உரையாடலின் போது, காட்டுத் தீ விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி தனது இரங்கலைத் தெரிவித்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி மற்றும் வெள்ளம் உள்ளிட்ட இயற்கை பேரழிவுகளை எதிர்கொண்ட இலங்கை, இந்த நேரத்தில் அவுஸ்திரேலியா மக்கள் மீது பரிவுணர்வுடன் இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீ ஏற்கனவே மீட்புப் பணியாளர்கள் உட்பட 30 இற்கும் மேற்பட்டவர்களின் உயிரைக் காவு வாங்கியுள்ளது, அதேநேரத்தில் நாட்டின் தாவர மற்றும் விலங்கினங்களும் பாரிய அளவில் அழிவடைந்துள்ளன.

பல மாதங்களாக கட்டுக்கடங்காமல் அதிகரித்துவரும் காட்டுத் தீயால் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான விலங்குகள் உயிரிழந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை பெறுபேறு

**யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்**

**வணிகப் பிரிவு**

ச.பிரித்திகா-3ஏ,எ.மதுஷா-ஏ2பி,பி.வினோஜன்-பி2சி, திவ்யா-3சி,வ.கிருசாந்தி-2சிஎஸ், கே.சரணுஜா-சி2எஸ்.

**கலைப்பிரிவு**

வ.குயிலினி-2ஏபி, உ.நிதுஷன்-ஏ 2பி, சு.அர்ச்சனா-பி2சி, எஸ்.துஜிதா-பி2சி,கே.நிஷனா-பி2சி,ரி.பிரியந்தி-பிசிஎஸ்.

# வடக்கின் நீர்நிலைகளை ஆழமாக்கி நீர்வாழ் வளங்களை அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸின் ஆலோசனையில் கள ஆய்வு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு மற்றும் அச்சுவேலி களப்புக்களில் சுமார் 40 இலட்சம் மீன் குஞ்சுகளையும் 40 இலட்சம் இறால் குஞ்சுகளையும் இடுவதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் களப்புக்களை ஆழமாக்கி நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் மூன்று நாட்களாக கள ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளினாலேயே மேற்குறித்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தொண்டைமானாறு மத்தொணி மற்றும் அச்சுவேலி உப்பாறு ஆகிய நீர்நிலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் இரண்டு நீர்நிலைகளிலும் தலா 20 இலட்சம் மீன் குஞ்சுகளையும் 20 இலட்சம் இறால் குஞ்சுகளையும் இடுவதற்கு தீர்மானித்தனர். அதேவேளை பூநகரி செட்டியார் குறிச்சி மற்றும் குறிஞ்சி 1 குறிஞ்சி 2 ஆகியவை உட்பட்ட சில களப்புக்களை ஆழமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களினால் கடந்த காலங்களில் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் கோரிக்கை முன்வைக் கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்ச ராக பொறுப்பேற்றுள்ள அமைச்சரால் குறித்த கோரிக்கை தொடர் பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் குறித்த மாவட்டங்களுக்கான கள ஆய்வு விஜயத்தை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர்.

அதனடிப்படையில் பூநகரி செட்டியார் குறிச்சி களப்பினை இந்த வருட இறுதிக்குள் முழுமையாக ஆழமாக்கி வழங்க முடியுமென பிரதேச மக்களுக்கு அதிகாரிகளால் உத்தரவாதமளிக்கப்பட்டது. அதேபோன்று நாச்சிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள கிறஞ்சி 1 மற்றும் கிறஞ்சி 2 ஆகிய களப்புகளையும் ஆழமாக்கி இறங்குதுறையை புனரமைப்பதற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இரணைமாதா நகர் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராய்ந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அது தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உதவிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தினர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாற்றில் காணப்படுகின்ற மண் திட்டுக்களையும் அகற்றுவது தொடர்பாக குறித்த இடத்திற்கு நேரடியாக விஜயம் செய்த அதிகாரிகளால் ஆராயப்பட்டது.

அதனை அகற்றுவதற்கு கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டிய நடைமுறைத் தேவை இருப்பதன் காரணமாக குறித்த அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச உதவிப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

களப்புக்களை ஆழமாக்கும் செயற்பாடுகளிலும் அகழப்படுகின்ற மணல்களை கொட்டுவது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியுள்ளமையினால் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த கள ஆய்வுப் பணிகளில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜி.கஹாவத்த, கடற்றொழில் உத்தியோகத்தர் எஸ்.சிவ தர்ஸன், களப்பு அபிவிருத்தித் திட்ட அதிகாரி மஹிந்த மற்றும் பொறியியலாளர் ஆரியரட்ண ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கரவெட்டி அம்பிகை சனசமூக நிலையம் மற்றும் சிறுவர் பூங்கா திறப்பு விழா என்பன நேற்று முன்தினம் ச.புஸ்பராசா தலைமையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

(படங்கள்:- மகாலிங்கம்)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கோண்டாவில் வடக்கு
ஸ்ரீவாகீஸ்வரி மன்றத்தின்
சக நாடகக் கலைஞன்
திருவாளர் வயிரமுத்து சந்திரசேகரம்
(ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்)
அவர்களுக்கு கடந்த 15.12.2019
அன்று கொழும்பு தாமரைத்தடாக அரங்கில்
அரச விருதான கலாபூஷணம்
விருது கிடைத்தமைக்காக
மனமார்ந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் வாகீஸ்வரியின்
மூத்த கலைஞர்கள்
K.S.செல்வரத்தினம்
(செல்வா எலற்றிக்கல்,திருநெல்வேலி)
கலாபூஷணம் V.K.தர்மகுலசிங்கம்.
S.சற்குணம் (செல்லப்பா அன்சன்ஸ்,யாழ்ப்பாணம்),
கலாபூஷணம் V.K.சந்திரகுலசிங்கம்
கலைஞானச்சுடர் S.கனகசபை

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.

(1808)

# நல்லாட்சி அரசின் மோசடிகளுக்கு ரணிலே பொறுப்புக்கூற வேண்டும்



## கோட்டாபய சிறந்த தலைவர் - தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பில் தற்போதே தகவல்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டிலி ருந்து மீட்கப்பட்ட இறுவெட்டுக்களில் பதிவாகியுள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தினால் நாட்டில் சுதந்திரமாக இயங்க வேண்டிய சட்டத்துறையில் எவ்வளவு மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பது உறுதியாகும். நல்லாட்சி என்று கூறிக்கொண்டு செயற்பட்டவர்கள் நாட்டுக்கு எந்தவித நன்மையுமே செய்யவில்லை என்பது உறுதியா கியுள்ளதாக ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூறவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின் போது ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளிப்பதற்காகத் தீர்மானித்திருந்தது.

இது சரியான தீர்மானம் என்பதே எமது நிலைப்பாடு. தற்போது அது உறுதி செய்யப்பட்டுள்ளது. எமது செயற்குழு ஒன்றிணைந்தே இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. அதற்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாங்களும் பெரும் பங்காற்றியிருந்தோம். எங்களது தீர்மானத்தை எமது ஆதரவாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். சரியான தருணத்தில் நாங்கள் சரியான தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றே எமக்குத் தோன்றுகின்றது.

கடந்த அரசாங்கமே மீண்டும் ஆட்சி அமைத்திருந்தால் நாடு பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்க வேண்டியிருந்திருக்கும். கடந்த காலங்களில் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருந்த சவால்கள் தொடர்பில் நீங்கள் நன்கு அறிவீர்கள். தற்போது அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சி என்று கூறிக்கொண்டு செயற்பட்டவர்கள் நாட்டுக்கு எத்தகைய நல்ல செயல்களையும் முன்னெடுக்கவில்லை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. இந்நிலையில் கடந்த அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கம்பெரலிய மற்றும் பெருந்தெருக்கள் வேலைத்திட்டங்களுக்காக பெருந்தொகையான நிதி செலவீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அப்போது சேவையில் ஈடுபட்ட ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் கூட நல்லாட்சி அரசாங்கத்தால் முறையாக வழங்கப்படவில்லை. ஜனாதிபதி கோட்டாபய சிறந்த தலைவர் என்பதை அவரது செயற்பாடுகளின் ஊடாக நாட்டு மக்களுக்கு உணர்த்தி வருகின்றார். முன்னைய அரசாங்கங்களில் இடம் பெற்ற பெரும் தொகையான செலவுகளை அவர் தற்போது கட்டுப் படுத்தியுள்ளார்.

அவர் முன்மாதிரியாகச் செயற்படுகின்றமையால் அரசாங்கத்தின் ஏனையவர்களும் அவரைப் பார்த்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். நல்லாட்சியால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் தொடர்பில் தற்போதே தகவல்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டிலிருந்து மீட்கப்பட்ட இறுவெட்டுகளில் பதிவாகியுள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தினால் நாட்டில் சுதந்திரமாக இயங்க வேண்டிய சட்டத்துறையிலே எவ்வளவு மோசடிகளை செய்துள்ளார்கள் என்பது உறுதியாகியுள்ளது.

இந்தச்செயற்பாட்டினால் சட்டத்துறை மீதான மக்களின் நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மோசடிகளில் பங்கு கொண்டுள்ள அரசியல்வாதிகள், சட்டத்துறை அதிகாரிகள், பொலிஸார், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் மீது விசாரணைகளைச் செய்து அதற்கமைய அவர்களுக்கான தண்டனைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். அரசியல் பழிவாங்கல் போக்கில் செயற்படுவதைப் போல் வெறுமனே கைதுகளை செய்யாது உரிய விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்தின் உத்தரவுக்கமையவே தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்டாலும் ஜனநாயக ஆட்சியை முன்னெடுப்பதற்காக தொடர்ந்தும் செயற்படுவோம். கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதிலளிக்க வேண்டும். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிய பலமுறை கேடுகள் இடம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சுதந்திரமான சட்டத்துறை இயங்குவதாக தெரிவித்து வந்தவர்களின் ஆட்சிக்காலத்திலே சட்டத்துறைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இந்த விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சும் கவனம் செலுத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மறவன்புலவு காற்றாலைத் திட்டத்தால் மக்களுக்கு உளவியல் பாதிப்பு ஏற்பட்டால் மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்

## முன்னாள் ஆளுநர் குழு பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

மறவன்புலவு காற்றாலைத் திட்டம் பொதுமக்களுக்கான வரப்பிரசாதமாக அமைந்துள்ள போதும் குறித்த திட்டம் மூலம் அப்பகுதி மக்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுமாயின் மாற்று ஏற்பாடுகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என வடமாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் அமைக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் குழு பரிந்துரை முன்வைத்தது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மறவன்புலவு காற்றாலை தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றிய போதே குறித்த குழுவினர் மேற்கண்டவாறு பரிந்துரை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், குறித்த காற்றாலைத் திட்டம் தொடர்பில் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்கள், அவை தொடர்பிலான எழுத்துமூல முறைப்பாடுகள் என்பவற்றை முன்னிலைப்படுத்தி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

குறித்த காற்றாலையால் வெளியிடப்படும் அதிர்வு 40-50 டெசி வரை காணப்படும் நிலையில் மக்களுக்கு அச்சமூட்டும் வகையில் அதிர்வலைகளின் தாக்கம் இடம் பெறாது.

இருப்பினும் மனிதர்கள் எல்லோரும் ஒருவிதமாகக் காணப்படமாட்டார்கள். அவர்களின் மனோ நிலையைக் குழப்பும் வகையில் குறித்த ஒலி அமைப்புச் செயற்பாடு இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டால் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

காற்றாலைத் திட்டத்தின் மூலம் பொதுமக்களின் காணிகள் குறைந்த விலைகளில் வாங்கப்பட்டதாகவும் தமது காணிகளைச் சிலர் கபடத்தனமாக விற்பனை செய்து விட்டதாக எமது குழுவுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு கிடைத்தது.

காற்றாலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிலையில் மக்களின் காணிகளின் பெறுமதியில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்ற ரீதியில் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிப் பரிகாரம் காணப்படவேண்டும்.

மேலும் குறித்த திட்டத்தால் பாதிக்கப்படும் எனக் கருதும் பிரதேச காணிகள் மற்றும் ஏனைய வளங்களுக்கு உரிய இழப்பீடுகள் கொடுக்கப்படுவதோடு அபகரிக்கப்பட்டதாகக்கூறப்படும் காணிகள் தொடர்பில் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றித் தீர்வு காணப்பட வேண்டும்.

காற்றாலைக் கம்பங்களை நாட்டும் போது போடப்படும் துளைகளால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட மாட்டாது. எனினும் குறித்த பகுதியில் காற்றாலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் குடிநீரில் மாற்றம் ஏற்பட்டால் அதற்கான மாற்று வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக்குறித்த குழு பரிந்துரை முன்வைத்தது.

இக்குழுவில் யாழ்.பல்கலைக் கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஜீவசுதன், பௌதீகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.தேவகரன் மற்றும் விலங்கியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே. கஜபதி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கிராம பிரதட்சண விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு-சித்தியம்பதியுறை திருவருள்மிகு ஶ்ரீ அண்ணமார் தேவஸ்தானத்தின் வருடாந்த கிராமப் பிரதட்சண விழா (கிராம ஊர்வலம்) நாளை மறுதினம் 11ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பூசைகளுடன் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் கிராம ஊர்வலம் இடம்பெறும். (இ-3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 240 | 170 | 300 |
| தக்காளி | 200 | 160 | 200 | 140 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 100 |
| கோவா | 170 | 140 | 160 | 110 | 160 |
| கரட் | 300 | 350 | 440 | 300 | 400 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 | 80 |
| புடோல் | 120 | 160 | 140 | 110 | 150 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 280 | 450 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 100-130 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 90 | 200 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 180 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 170 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 | 350 | 400 |
| பீற்றூட் | 180 | 200 | — | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 140 | 120 | 240 |
| முருங்கைக்காய் | — | 1600 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 60 | 250 | 280 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 90 | 100 |
| கீரை - 1பிடி | 60 | 40 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 30 | 40 | 60 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 55 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 200 | 180 | 170 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 320 | 200 | — |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | 60 | 100 | 100 |

# யாழ். பல்கலையில் நேற்று பேரெழுச்சியுடன் தமிழமுதம் விழா












(குப்பிழான்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழமுதம் விழா நேற்றுப் புதன்கிழமை பேரெழுச்சியுடன் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 8.15 மணியளவில் பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள சிவன் அம்மன் கோயில் முன்றலில் மாபெரும் கலாசார ஊர்வலப் பவனி ஆரம்பமாகியது. குறித்த பவனியில் காவடியாட்டம், சிலம்பாட்டம், குதிரையாட்டம் உள்ளிட்ட தமிழரின் பாரம்பரிய கலைகள் கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டன.

குறித்த கலாசாரப் பவனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை சென்றடைந்த தைத் தொடர்ந்து பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள சேர்.பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேரா சிரியர் இ.விக்னேஸ்வரன் மலர் மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்ட மேடையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் என்.திவாகரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது தமிழரின் பாரம்பரிய கலை, கலாசாரத்தைப் பறைசாற்றும் வகையில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. குறித்த நிகழ்வுகளில் பல்கலைக்கழக மாணவ.மாணவிகள் அதிக ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

தமிழமுதம் விழா ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்.பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், யாழ்.மாநகர சபையின் முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவ- மாணவிகள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (இ-18)

## வடக்கில் கலை இலக்கிய மன்றங்கள் மீள் பதிப்பு


(யாழ்ப்பாணம்)

01.01.2007 இற்கு முன்னர் வடக்கு - கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் 2019 இற்கு முன்னர் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களின் இயங்கு நிலையை உறுதிப்படுத்துவதற்காக 29.01.2019 ஆம் திகதிய கடிதம் மூலம் மீள் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கமைய 132 மன்றங்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று பதிவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2019 இற்கு முன் பதிவு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு மீள் பதிவு செய்யப்படாத மன்றங்களின் பதிவு இலக்கங்கள் யாவும் 15.01.2020 ஆம் திகதி முதல் இரத்துச்செய்யப்படுகின்றன. மேற்படி மன்றங்களின் பழைய பதிவு இலக்கத்தை பின்பற்றுதல் செல்லுபடியற்றதாகும்.

மேலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டிற்கு முன் பதிவு செய்யப்பட்டு மீள் பதிவு செய்யாத மன்றங்களின் செயற்பாடுகளுக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அல்லது கலாசார உத்தியோகத்தர்கள் எந்த வகையிலும் பொறுப்பற்றவர்கள் அல்ல என்பதனை அறியத்தருகின்றேன் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இறுதிச் சந்தர்ப்பமாக மன்றங்களை மீள் பதிவு செய்ய விரும்பும் கலை இலக்கிய மன்றங்கள் அது தொடர்பாக பிரதேச செயலகத்திலுள்ள கலாசார உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பத்தை 31.03.2020 இற்கு முன்னர் அனுப்ப முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)



### மரண தண்டனை விதிக்கப்பட்ட

# துமிந்த சில்வாவை விடுதலை செய்ய முயற்சி

### ஹிருணிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் கொலைக் குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகள் அரச தரப்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

'பாரத லக்ஷ்மன் கொலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் இறுவெட்டில் ஷானி அபேசேகர, வழக்கில் என்ன நடந்தது என்பதை கூறியிருக்கிறார்.

இதனை வைத்துக்கொண்டு அபேசேகரவை விசாரணை மேற்கொள்ள வேண்டிய வழிகளை ரஞ்சன் ராமநாயக்க அவரிடம் கூறவில்லை.

அதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்கவுடன், ரஞ்சன் ராமநாயக்க மேற்கொண்ட தொலைபேசி உரையாடலை வைத்துக்கொண்டு துமிந்த சில்வாவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்று ஊடகங்கள் கூறுவது அபத்தமானது.

இவையாவும் பொதுத்தேர்தலுக்கு முன்னர் துமிந்த சில்வாவை பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கும் முயற்சிகளாக உள்ளன. எனினும் நாட்டு மக்கள் இதற்கு உரிய பாடத்தைப் புகட்டுவார்கள்.

அதேபோன்று மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்த்தன போன்றவர்கள் 'கடந்த காலத்தில் துமிந்த சில்வாவை போதைப்பொருள் விற்பனைக்காரன் என்று மிகமோசமாக விமர்சித்ததுடன் மாத்திரமல்லாமல், கொழும்பில் மகிந்த ராஜபக்ஷவின் நீலக்கொடியை ஏற்றுவதற்கு எனது தந்தை மாத்திரமே இருந்தார் என்றும் பாராட்டியிருக்கிறார்கள்.

ஆனால் தற்போது அவர்களே துமிந்த சில்வா நல்லவர் என்றும், எனது கோரிக்கைகளுக்கு அமைவாகவே அவர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு எதிரான மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையை கிழித்தெறியத் தயார்!



## நாடாளுமன்றில் சஜித் ஆவேசம்

(கொழும்பு)

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் உள்ளிட்ட இலங்கைக்கு எதிரான உடன்படிக்கைகள் அனைத்தையும் பெப்ரவரி 4 ஆம் திகதி கிழித்தெறியத் தயாராகவே உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பாக அரசாங்கத்தின் பதில் என்ன என்றும் அவர் வினவினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். "அரசியல் மேடைகளில் கொள்கைப் பிரகடனங்களை அறிவிப்பது ஒரு வழக்கமான விடயமாகும்.

அந்தவகையில், அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தக் கொள்கைப் பிரகடனத்தை நம்பித்தான் 63 இலட்சம் மக்கள் இந்த அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள். இதற்காக நாம் முழுமையான ஒத்துழைப்புக்களை அரசாங்கத்துக்கு வழங்கத் தயாராகவே இருக்கின்றோம்.

கடந்த நவம்பர் 15 ஆம் திகதி நாட்டில் காணப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும், ஜனவரி 6 ஆம் திகதி வரையிலான அத்தியாவசியப் பொருட்களின் விலைக்கும் இடையிலான வித்தியாசங்களைக் கண்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஒன்றரை மாதங்களிலேயே மக்கள் மீது சுமை ஏற்றப்பட்டுள்ளது. அரசாங்கம் மேற்கொள்ளும் மக்கள் சேவைக்கு நாம் முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவே இருக்கின்றோம்.

இராணுவத்தைப் பாதுகாத்தல், தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்ல, அதற்கு மேலாகவும் வழங்கத் தயாராகவே இருக்கின்றோம்.

நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில், முதலில் இங்கு புரையோடிப்போயுள்ள இனவாதத்தை முற்றாக துடைத்தெறிய வேண்டும்.

இதன் ஊடாகத்தான் தேசிய பாதுகாப்பையும் பலப்படுத்த முடியும். இதற்கான விசேட வேலைத் திட்டங்களை நாம் கொண்டு வரவேண்டும்.

ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் அதிகப்படுத்தும் போதுதான் இந்தச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது எம்.சி.சி. உடன்படிக்கை, எட்கா, சோபா உடன்படிக்கை, சிங்கப்பூர்-இலங்கை உடன்படிக்கை உள்ளிட்ட உடன்படிக்கைகள் தொடர்பாக இப்போதைய அரசாங்கத் தரப்பினர் குற்றம்சாட்டினார்கள்.

இவற்றால், இலங்கை இரண்டாக பிளவடையும் என்று கூறினார்கள். நான் இங்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த உடன்படிக்கைகளை கிழித்தெறிய நாம் தயாராகவே இருக்கின்றோம். நாம் இரண்டு, தரப்பினரும் ஒன்றிணைந்து பெப்ரவரி 4 ஆம் திகதி எம்.சி.சி. உடன்படிக்கையை கிழித்தெறிவோம். இதற்கு நாம் தயார்.

அதேநேரம், தற்போது சிலர் எம்.சி.சி. உடன்படிக்கையை செய்துகொள்வது தொடர்பாகவும் பேசுகிறார்கள். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. எம்.சி.சி. மட்டுமன்றி, ஏனைய உடன்படிக்கைகளையும் இல்லாது செய்ய நாம் தயாராகவே இருக்கின்றோம்.

இதுதொடர்பாக அரசாங்கத்தின் பதில் என்ன? என்று நான் கோர விரும்புகின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு

(ஏறாவூர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்டோரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டது.

குறித்த வழக்கு மீதான விசாரணை நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம்.இஸ்ஸடீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வழக்கை ஒத்தி வைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 25.12.2005 அன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக, முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம், இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் மீராலெப்பை கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1940

Search for people, places and things

### கவிப்பிரியா

உன்னை பற்றி உன் பின்னால் பேசுபவர்களை நினைத்து நீ கவலைப்பட்டாதே.



அவர்கள் உன்முன் நின்று பேசுவதற்கு கூட தகுதி இல்லாதவர்கள்...!

### நிசாந்தன்

அடைய வேண்டிய இலக்கு அவசியம் என்றால்...



பாதை கடினமானாலும் பயணிக்கத்தான் வேண்டும்.

### ஆதித்தன்

சகுனிகள் நிறைந்த உலகில் சத்தியத்தை வைத்து ஒன்றும் செய்ய முடியாது...



கொஞ்சம் சுயநலத்தோடு இருப்பது நல்லது...


### டினுசியா

இலட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது...




### இந்துஷா


ஆழம் குறைவோ அதிகமோ அடிக்க வேண்டியது நீச்சல் மட்டுமே.



சோதனைகள் ஒன்றோ பலவோ செய்ய வேண்டியது முயற்சி மட்டுமே!

### மதுபாஜினி

எத்தனை பேர் என்ன சொன்னாலும் நமக்கு பிடித்தது போல் நாம் வாழ்வதில் இருக்கிறது...



நமக்கென்ற ஒரு அடையாளம்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பழமொழிகள்

- எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக்கடிக்குமா?
- எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?
- எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
- எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின்புத்தி.
- எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.
- எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும்
- எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான்.
- எள்ளுக்கு ஏழு உழவு , கொள்ளுக்கு ஓர் உழவு.
- எறும்பூரக் கல்லும் தேயும்.
- எருது உழுகிறவன் இளப்பமானால்எருது மச்சான்முறை கொண்டாடும்.
- ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத்தலைச்சுமை.

# விடுகதைகளும் விடைகளும்

- தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன?
தொட்டா சுருங்கிச் செடி

- ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?
கொடி

- அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
நிலா

- பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?
பெற்றோல்


- இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
இதயம்

# பொது அறிவு

- உலக தண்ணீர் தினம் :- நவம்பர் 11
- உலக சுகாதார தினம் :- ஏப்ரல் 7
- தேசிய கல்வி தினம் :- நவம்பர் 11
- உலக சுற்றுச்சூழல் தினம் :- ஜூன் 5
- உழைப்பாளர்கள் தினம் :- மே 1
- தேசிய மருத்துவர்கள் தினம் :- ஜூலை 1
- தேசிய தீயணைப்பு சேவை தினம் :- ஏப்ரல் 14
- தேசிய பெண் குழந்தைகள் தினம் :- ஜனவரி 24
- அன்னையர் தினம் :- பெப்ரவரி 22
- தேசிய அறிவியல் தினம் :- பெப்ரவரி 28
- தேசிய தடுப்பூசி தினம் :- மார்ச் 16
- தியாகிகள் தினம் :- ஜனவரி 30
- தேசிய வாக்காளர் தினம் :- ஜனவரி 25
- தேசிய இரத்ததான தினம் :- ஒக்டோபர் 01
- தேசிய கணித தினம் :- டிசெம்பர் 22
- பொறியாளர்களின் தினம் :- செப்டெம்பர் 15
- இந்திய தேசிய விளையாட்டு தினம் :- ஓகஸ்ட் 29




# போதனைகள் நம்மை சீர்திருத்தும்



ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான்.

அவன் ஊதாரித்தனமாக தனது தந்தை இதுவரை சேர்த்து வைத்த செல்வத்தை எல்லாம் வீணாக செலவழித்து வந்தான். அவரின் அறிவுரைகளையும் விளையாட்டாகவே தட்டிக்கழித்தான்.

அதனால் மிகவும் கவலையில் இருந்த செல்வந்தர், அந்த ஊருக்கு வந்த ஒரு துறவியிடம் தமது கவலையை கூறினார்.

அதற்கு அந்த துறவி "உங்கள் மகனை இங்கு அனுப்பி வையுங்கள்" என்று கூறினார்.

செல்வந்தர் தன் மகனிடம் சென்று, "நமது ஊருக்கு வந்திருக்கும் துறவி மிகவும் சக்தி வாய்ந்தவர். அவரை பார்த்து ஆசி வாங்கி வா" என்று அனுப்பி வைத்தார்.

அவனும் வேண்டா வெறுப்பாக சரி என்று ஒப்புக் கொண்டு துறவியை பார்க்க சென்றான்.

துறவியை சந்தித்து "என் தந்தை உங்களைக் காண அனுப்பினார்" என்று கூறினான்.

துறவியும் "நல்லது என் பின்னால் அந்த மலைக்கு வா, உனக்கு ஒரு உபதேசம் செய்ய சொல்லி இருக்கிறார் உன் தந்தை" என்று அழைத்தார்.

அவனும் துறவியை பின் தொடர்ந்து மலை மீது ஏறத் தயாரானான். அப்போது துறவி ஒரு சிறிய பாறாங்கல்லை சுமந்து வருமாறு கூறினார்.

அவனும் சரி என்று அந்த கல்லை தூக்கிக் கொண்டு கஷ்டப்பட்டு மலை மீது ஏறினான். மேலே வந்தவுடன் அந்த கல்லை உருட்டிவிடும் படி துறவி கூறினார்.

அவனுக்குக் கடுமையான கோபம் வந்தது. "என்ன விளையாடுகிறீர்களா?" என்று கேட்டான்.

அதற்கு துறவி, "இல்லை மகனே... எதனால் உனக்கு இந்த கோபம் வந்தது" என்று கேட்டார்.

அவன், "எவ்வளவோ கஷ்டப்பட்டு கொண்டு வந்த என் உழைப்பை. ஒரு நொடியில் வீணடிக்க சொல்கிறீர்கள். பிறகு கோபம் வராதா" என்று கேட்டான்,

அதற்கு துறவி, "உன் தந்தை சேர்த்த செல்வமும் அவருக்கு இருக்கும் நன்மதிப்பும் இப்படித்தான் அவர் கஷ்டப்பட்டு சேர்த்தது. ஆனால் நீ அதையெல்லாம் பாழ் செய்வது எந்த விதத்தில் நியாயம்" என்று கேட்டார்.

அவன் வெட்கித் தலைகுனிந்தவனாய் துறவியிடம் நன்றி சொல்லி விட்டு, தனது தந்தையிடம் சென்று மன்னிப்பு கேட்டான்.

இந்தக் கதை போலத்தான் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முன்னோர்கள், சித்தர்கள் வகுத்த நெறி முறைகளை பின்பற்றாமல் ஏனோ தானோ என்று வாழ்கிறோம்.

அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற விலையில்லாத தத்துவங்களையும் அறநெறிகளையும் போதனைகளையும் மறந்து, கடவுளை போற்றாது முடிவில் இறந்தும் போகிறோம்.

இறைவன் பல்வேறு வழிகளில் நமக்கு அளித்த ஞானம் என்னும் செல்வத்தை பாதுகாத்து வாழ்வோமேயானால் நமக்கு என்றும் துன்பமில்லை.

# பெண் விடுதலை



விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்வெல்லுவம் என்றெ
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்
இடையிலேபட்ட கீழ்நிலை கண்டீர்.
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

திறமை யால்இங்கு மேனிலைசேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்
அறவி முந்தது பண்டை வழக்கம்
ஆணுக் குப்பெண் விலங்கெனும் அஃதே

விடியு நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு,தாம்முதல் என்றன ரன்றே.
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே,
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர்,நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர்,துணி வுற்றே

ஆசிரியர் : மகாகவி பாரதியார்.

## நாளையெம் தேசத்தில் நல்ல தீர்வு வர வேண்டி

# ஈழத்து சிதம்பரத்தில் பஞ்சரத பவனி கண்டு சிவனை வேண்டுவோம் வாரீர்

ஈழத்தில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவவழிபாடு நிலவி வந்துள்ளமையை வரலாற்று ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. இதனாலேயே தான் ஈழம் சிவபூமியென திருமூலராற் போற்றப்பட்டது.



### இராவணன் காலத்திலிருந்த சிவாலயங்கள் உருப்பெற்று எழுந்தன.

இராவணன் எனும் இலங்கை மன்னன் சிவபக்தன். இவனைத் திருஞான சம்பந்தர் "இராவணன் மேலது நீறு" என எடுத்து ஓதுவதிலிருந்து இராவணன் காலம் முதலாக ஈழத்தில் சைவ நெறியே போற்றப்பட்டு வந்ததென்பது உண்மை. மேலும் "அழகமர் வண்டோதரிக்கும் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்" என மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் கூறுவது இதனை மேலும் வலியுறுத்தும். மண்டோதரி இராவணனின் மனைவியாவாள். இராவணன் காலத்திலிருந்தே சிவாலயங்களும் உருப்பெற்று நிலவி வந்துள்ளன. இதற்கோர் எடுத்துக்காட்டாக இன்றும் நிலவுவது திருகோணமலையாகும். இத்தகைய பெருமைமிக்க இலங்கையில் தொன்று தொட்டு இன்றுவரை பல்வேறு சிவாலயங்கள் உருப்பெற்று வழிபாடாற்றப்பட்டு வருகின்றன.

இத்தகைய சிவாலயங்களிலொன்றாக ஈழத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயுள்ள காரைநகரிலே சிறந்து விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் என போற்றப்படும் சிவன் கோவிலாகும். சைவர்களுக்கு கோயில் என்றால் சிதம்பரமாகும். இக் கோயிலை என்றும் நினைவுபடுத்தும் வகையில் ஈழத்தில் இருக்கும் சிவஸ்தலம் ஈழத்து சிதம்பரம். இத் திருத்தலம் காரைநகர் ஈசான மூலையில் பரந்தகன்ற பெருவெளியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக விளங்குகின்றது.

பக்தியும், ஆசாரமும் விளங்க அருள் பாலிக்கும் சிவப்பதியாக ஈழத்தில் இவ்வாலயம் விளங்குகின்றது. ஆண்டி முனிவரின் சித்தும் அம்பலவி முருகரின் தியாகமும் இணைந்தே இந்த ஆலயம் தோற்றம் பெற்று இன்று பெரு வளர்ச்சி கொண்டு விளங்குகின்றது.

### ஆண்டிகேணி ஐயனார்

இங்கே சிவனுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஐயனார் ஓர் அற்புத மூர்த்தியாக என்றும் விளங்குகின்றார். ஆண்டி முனிவர் ஆலயத்தின் தென்கிழக்கு மூலையை தோண்டிய பொழுது தோன்றியவரே ஐயனார். அதனால் ஆண்டிகேணி ஐயனார் என்ற திருநாமம் பெருமானுக்கு ஏற்பட்டது.

### "தில்லைக் கூத்தனின் தரிசனம்"

ஈழத்து சிதம்பரம் என்ற மகிமைக்கு காரணம் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானும் அவனுக்கு இடம்பெறும் வழிபாடுகளும் தான். காண வீடு பேறளிப்பது சிதம்பரம். ஆனந்த நடராசனின் திருவடிவம் திருவைந்தெழுத்தால் ஆனவை என்பர். சிதம்பரம் தவிர ஏனைய ஆலயங்களுள் காணப்படுபவை திருவைந்தெழுத்தால் ஆனவை அல்ல எனவும், அவை மகேஸ்வர வடிவங்கள் இருபத்தைந்தினுள் ஒன்றே என்றும் ஆய்வாளர் கூறுவர். அவ்வாறானவரே ஓங்காரமான வடிவமே திருவாசி ஐம்பத்தொரு சுடர்களும் அட்சரங்களாகும்.

### திருவாசியில் ஐம்பத்தொரு சுடர்கள்

ஆடல்வல்லானின் திருவுருவம் கலையம்சத்துடன் காட்சியளிக்கின்றது. நடராஜப் பெருமானின் திருவாசியில் ஐம்பத்தொரு சுடர்கள் இருப்பது தனித்துவமான சிறப்பாகும். இவை ஐம்பத்தொரு அட்சரங்களைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

### ஆடல்வல்லானின் அருட்கோலம்

திருமுருக கிருபானந்தவாரியாரின் சுவாமிகள், ந.வச்சிரவேலு முதலியார், சிங்காரவேலன்,பாஸ்கரத் தொண்டமான், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினம் 23 ஆவது குருமகா சந்நிதானம் தருமை ஆதினம், முனைவர் ஸ்ரீமத்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள், பேரூர் ஆதினம் போன்றோர் தமிழ் நாட்டிலேயே ஒரு சில ஆலயங்களில் தான் இத்தகைய அழகிய பதஞ்சலி,வியாக்கிரபாதரோடு கூடிய மூர்த்தியைத் தரிசித்து விமர்சித்துள்ளார்.

திருவாவடுதுறை குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஆடல் வல்லான் அருட்கோலம் கண்டு வழிபட்டு ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் திருமுடி திரிசடையாக அல்லாமல் உச்சிக் கொண்டையாக அமையப் பெற்றது தனிச்சிறப்பு என ஆதீன வெளியீடான மெய்கண்டானில் சிறப்பாக எழுதியுள்ளார்.

ஈழத்துச் சிதம்பரத்தில் மூன்று மஹோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மார்கழித் திருவாதிரையே மிகச் சிறப்பான உற்சவம்.திருவாதிரையில் பஞ்சரத பவனியையும் பின் நடராஜப் பெருமானுக்கு ஆருத்திரா அபிஷேகத்தையும் கண்டு ஆனந்தமடைபவர்கள் ஏராளமானவர்கள்.

### 108 சிவத்தாண்டவங்களோடு கூடிய திருத்தேர்

இத்தகு மகத்துவ தரிசனம் ஈழத்து சிதம்பரத்தில் பஞ்சரத பவனியாக கொண்டாடப்படுகின்றது. ஈழத்து சிதம்பர ஆடல் வல்லான் சௌந்தராம்பிகை சகிதம் 39 அடி உயரமான நாகரவடிவிலமைந்த ஐந்து தளங்களைக் கொண்ட,108 சிவத்தாண்டவங்கள் காட்சியளிக்க 63 நாயன்மார் கள், 25 மகேஸ்வர மூர்த்தங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தேரில் பவனி வருகின்ற சிதம்பர தரிசனம் கண்கொள்ளாக்காட்சியாகும்.

எல்லாம் வல்ல ஆடல் வல்லான் சிதம்பர சுந்தரேசப் பெருமான் ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வினையும் சமாதான வாழ்வையும் தரவேண்டுமென எல்லோரும் வேண்டுதல் செய்வோம் வாரீர்!

**செந்நாப்புலவர். மதுரகவி.**
**காரை எம்.பி. அருளானந்தன்.**



யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையால் சிறந்த கூட்டுறவாளர் விருது உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தின் இமையாணன் கிளை இல. 02 இன் தலைவர் சேனாதிராசா ரவீந்திர நாதனுக்கு கூட்டுறவின் தந்தை வீரசிங்கத்தின் நினைவு நாளில் (5.12.2019) வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.




# பாதுகாப்பற்ற கிணறுகளால் உயிரிழப்புக்கள் அதிகரிப்பு

## சாவகச்சேரி பொலிஸார் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

பாதுகாப்பற்ற கிணறுகள் மற்றும் நீர்த் தடாகங்களால் அநியாயமாக சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் மரணத்தைச் சம்பவித்து வருவதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சிப் பகுதி உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் பாதுகாப்பற்ற கிணறுகளால் வருடம்தோறும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் தவறி விழுந்து உயிரிழக்கின்றனர். எமது வீட்டுக் கிணறு மாத்திரம் பாதுகாப்பானதாக இருந்தால் போதாது. தோட்டக்கிணறு மற்றும் அயல் வீட்டுக் கிணறுகள் போன்றனவும் பாதுகாப்பானதாக இருந்தாலே எமது குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க முடியும். எனவே எமது வீட்டில் குழந்தைகள் இல்லை என அசண்டையீனமாக இருந்து விடாமல் எமது வீட்டிற்கு வரும் அயல் வீட்டு சிறுவர்களின் பாதுகாப்பையும் கருத்தில்கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் கிணறுகள் மற்றும் நீர்த்தடாகங்களை மூடிப் பாதுகாப்பானதாக வைத்திருக்க வேண்டும். அனைவரும் விழிப்பாக இருக்கும் பட்சத்தில் இவ்வாறான பரிதாப மரணங்களைத் தவிர்க்க முடியும் என மேலும் தெரிவித்தனர். சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் அயல் வீட்டுக் கிணற்றுக்குள் தவறி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தமை மற்றும் கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலைப் பகுதியில் 85 வயது முதியவரொருவர் கிணற்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தமையையும் பொலிஸார் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஜ-30)

> நற்பண்பு இல்லாத அறிவு ஆபத்தானது.
> அறிவில்லாதவனின் நற்பண்பு பயனற்றது.
> – நேரு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாடப் புத்தகத்தை மட்டும் படிக்கின்ற இடமாகிவிட்டதா பாடசாலைகள்

படித்தல், கற்றல் என்ற சொற்பதங்கள் தம்மளவில் பொருள் வேறுபாடு கொண்டவை.

படித்தல் என்பது குறுந்தன்மை கொண்டது. கற்றல் என்பது பரந்துபட்டது.

அதாவது கற்றல் என்ற விரிபரப்புக்குள் படித்தல் என்பது அடங்கக்கூடியது.

ஆக, பாடசாலைகளில் கற்றல் செயற்பாடு இடம்பெறுகிறது. அதாவது பாடப்புத்தகங்களைப் படித்தல் என்ற எல்லை கடந்து; ஒழுக்கம், ஆன்மிகம், கட்டுப்பாடு, விளையாட்டு, ஒற்றுமை, பிறர்க்கு உதவுதல், பேச்சு, கவிதை, கட்டுரை, இசை, மனனம் என இன்னோரன்ன விடயங்களும் கற்றலுக்கு உட்படுகின்றன.

சுருங்கக்கூறின் பாடசாலைக் கல்வி என்பது தனித்து பாடம் சார்ந்த படிப்பு என்பதைக் கடந்து ஒரு மனிதனை ஆளுமைமிக்கவனாக ஆக்கித் தருகின்ற பெரும்பணியைப் பாடசாலைகள் செய்கின்றன.

எனினும் எங்கள் பாடசாலைகள் இப்போது பாடத்தை மட்டும் கற்பிக்கின்ற இடங்களாக மாறி வருகின்றதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதன் காரணமாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என்றால் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல், சாதாரண தரப் பரீட்சை என்றால் 9ஏ, உயர்தரப் பரீட்சை என்றால் 3ஏ என்பதாக*எங்களின் மனநிலை மாறிவிட்டது.

இதனால் பாடப்புத்தகத்தைப் படிப்பித்தல் என்ற மரபு வழி கடந்து பாடத்தை திணித்தல், தீர்த்துதல் என்ற நிலைமை வந்துவிட்டது.

இத்தகையதொரு நிலைமை வந்த பிற்பாடு எங்கள் மாணவர்களிடமும் இளம் சமூகத்திடமும் பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த வாழ்வியல் நடைமுறைகள் அறவே இல்லை என்றாகி விடுகிறது.

இந்த நிலைமை மிக ஆபத்தானது என்பதை நம் கல்விச் சமூகம் உணர்ந்தாக வேண்டும்.

ஆம், நேற்றைய தினம் காலைப்பொழுதில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்லூரியின் நுழைவாயிலுக்கு அருகில் அதே கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்து தடக்குற்று வீழ்ந்தார்.

அவரை ஏற்றி வந்தவரும் மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்து விட்டார். உடனடியாக இருவராலும் எழுந்து விடமுடியவில்லை.

யாரேனும் மோட்டார் சைக்கிளைத் தூக்கி விட்டால் மட்டுமே வீழ்ந்தவர்களால் எழ முடியும். எனினும் அந்த உதவியைச் செய்ய எவரும் முன்வரவில்லை.

மாணவர்கள் வேடிக்கையாகப் பார்த்தபடி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அவர்களைத் தூக்குங்கள் என்று குரல் கொடுத்தபோதுதான், வீதியால் சென்ற உயர்தர மாணவர்கள் ஓடி வந்தார்கள்.

இந்தச் சம்பவத்தைப் பார்த்தபோது மனம் நொந்து கொண்டது. விபத்தில் வீழ்ந்தவர்களைத் தூக்கி விடக்கூட நம் மாணவர்களால் முடியவில்லை.

அத்தகையதொரு மனநிலை அவர்களிடம் இருந்திருக்கவில்லை.

அதிலும் அதே பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் எனும்போது அந்த மாணவர்கள் துடித்திருக்க வேண்டுமல்லவா. எதுவும் நடக்கவில்லை என்றால் எங்கள் மாணவர்கள் பாடத்தில் ஏ சித்தி பெற்றால் அதுபோதும் என்ற மனநிலையிலேயே எங்கள் பாடசாலைகள் இயங்குகின்றன என்பதை உணர முடிகிறது.

## அமெரிக்கா - ஈரான் முறுகல் கொழும்பு பங்குச்சந்தை சரிவு

(கொழும்பு)

அமெரிக்கா - ஈரான் முறுகல் நிலை காரணமாக கொழும்பு பங்குச் சந்தையில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைத்தளங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மசகு எண்ணெய்யின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன்பிரகாரம் ப்ரெண்ட் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின் விலை 2.5 வீதத்தால் அதிகரித்து 69 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, தங்கம் மற்றும் ஜப்பான் யென்னின் பெறுமதியும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-3)

## இனந்தெரியாத கும்பல் ஒன்று உணவு விடுதி மீது தாக்குதல்

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணையில் அமைந்துள்ள உணவு விடுதியில் இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் உணவகப் பணியாளர் படுகாயமைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

மூடப்பட்டிருந்த விடுதிக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பல், பணம் வைக்கும் இடத்தைக் கேட்டே இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டதாக பணியாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம் கோட்டாபயவைச் சந்தித்து பேச்சு

(கொழும்பு) -

சிங்கப்பூர் சட்டம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் விஸ்வநாதன் சண்முகம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைச் சந்தித்து இருநாட்டு வர்த்தக உறவுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அவர் நேற்று நண்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இருநாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடினர்.

முக்கியமாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டிருந்தது. பயங்கரவாதத்தை எதிர்கொள்வது, இணையப் பாதுகாப்பு, தீவிரவாதத்தை கட்டுப்படுத்துதல், வெளிநாட்டு அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் புலனாய்வுத்துறையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வெறுப்புப் பேச்சு, இணைய வழியாக தவறான தகவல்களை பரப்புதல் ஆகியவற்றிற்கு தீர்வு காணுதல் மற்றும் சமய நல்லிணக்கத்தை பேணுதல் தொடர்பாக சிங்கப்பூர் அறிமுகப் படுத்தியுள்ள புதிய சட்டங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## ராஜிதவின் பிணையை ஆட்சேபித்து சட்டமா அதிபரால் மீள்மனுத் தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவுக்கு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய பிணையை ஆட்சேபித்து சட்ட மா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் மீள் திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவை தாக்கல் செய்ததாக சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளரும் ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருமான ( சட்டம்) அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

வெள்ளை வேன் விவகாரம் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்தினவை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணையில் செல்வதற்கு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜய்ரத்ன கடந்த 2019 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## லஞ்சீற்றுக்குப் பதிலாக வாழையிலையை பயன்படுத்த அறிவித்தல் வழங்க வேண்டும்

### சாவகச்சேரி பிரதேச சபையில் பிரேரணை சமர்ப்பிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தேநீர் கடைகள், உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் லஞ்சீற்றுக்குப் பதிலாக வாழையிலையைப் பயன்படுத்த அறிவித்தல் வழங்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கஜேன் சபையில் பிரேரணை ஒன்றினை சமர்ப்பித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற அமர்வின் போதே அவர் இப் பிரேரணையை சமர்ப்பித்தார். இது தொடர்பாக சபையில் உறுப்பினர் கஜேன் கருத்து தெரிவிக்கையில்,

சூடான உணவுப் பண்டங்களை பொலித்தீனால் சுற்றிப் பயன்படுத்துவதால் எதிர்கால சந்ததியினர் நோய் வாய்ப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளது. எனவே சாவகச்சேரி பிரதேசசபை ஆளுகைக்குட்பட்ட தேநீர்க்கடைகள், உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் உணவு பரிமாறும் போது லஞ்சீற்றை தடை செய்து அதற்கு மாற்றீடாக வாழையிலையைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் இச் செயற்பாட்டின் ஊடாக வாழை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க முடிவதுடன், உள்ளூர் விவசாயிகளுக்கு இலாபத்தையும் பெற்றுக் கொடுக்க முடியும். எனவே குறித்த பிரேரணை சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்படுவதுடன், தீர்மானத்தின் அடிப்படையில் உணவகங்கள் மற்றும் மண்டபங்களுக்கு அறிவித்தல் வழங்க வேண்டும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார். உறுப்பினரின் பிரேரணை சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், புதிய ஆண்டிற்கான அனுமதியை புதுப்பிக்கவரும் உணவக மற்றும் மண்டப உரிமையாளர்களுக்கு இது தொடர்பாக அறிவித்தல் வழங்கவும் சபை முடிவெடுத்துள்ளது. (ஜ-30)

## நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடியின் இரண்டாம் வருட நினைவஞ்சலி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரியின் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மன ஒருமைப்பாடுதான் வெற்றியின் இரகசியம் என்பதை அறிந்தவர்களே உண்மையில் புத்திசாலிகள். எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் ஒருவனுக்கு மன ஒருமைப்பாடு இருப்பது அவசியமான ஒன்று.

-புருஷோத்தமானந்தர்

## சத்திய தரிசனம்

### இல்லம் ஒரு கோயில்



❖ சமூகத்தில் கடைக்கோடியில் இருக்கும் நலிந்தவர்களுக்கு சேவை செய்வதே சாதனை. மன நோயாளிகள், ஆதரவற்றோர், ஏழைகள், சிறைக்கைதிகள் போன்றவர்களுக்குத் தொண்டாற்றுங்கள்.

❖ இரும்பு துருப்பிடித்தால் காந்தத்தால் அதனைக் கவர்ந்திழுக்க முடியாது. அதுபோல கடவுளோடு சேர விடாமல் தடுக்கும் தீய குணங்களை அகற்றினால் ஒழிய அருளைப் பெற முடியாது.

❖ உங்கள் இல்லம் சிறு கோயிலாக விளங்கட்டும். அங்கே குடும்பத்தோடு அமர்ந்து பக்திப்பாடல்களை பஜனை செய்யுங்கள்.

❖ தெய்வீக மணம் நம்மைச் சுற்றி பரவிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்குரிய நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொள்ள முயலுங்கள்.

❖ நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மறுவிளைவு உண்டு. இந்த கோட்பாட்டுக்கு உட்பட்டே நாம் செயலாற்ற வேண்டும்.

❖ உண்மையான அனுபவத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள். யாரையும் திசைமாற்றும் எண்ணத்தோடு செயற்படாதீர்கள்.

# அரையிறுதிக்குள் நுழைந்தது இமையாணன் மத்தி அணி



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 07:06 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்தி அணி வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இமையாணன் மத்தி அணி சார்பாக சதுர்சன், அனோஜன், சாருசன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க)

# அரியாலை ஐக்கியம் அணியை வென்றது மயிலங்காடு ஞானமுருகன் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக் "ஏ" பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வருகின்ற "லீக் சுற்றுக் கிண்ணம்-2020" உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக சுபாஸ் 02 , வகின்சன், தீபன் ஆகியோர் தலர் ஒரு கோலைப்பெற்றுக் கொடுத்தனர். (க)

# அரையிறுதிப் போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு கோண்டாவில் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதவுள்ளது. (க)



தென்மராட்சி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி ஒளிர் விளையாட்டுக் கழக அணி நாவற்குழி மகாவிஷ்ணு அணியை வெற்றி பெற்று சம்பியனாகியது.நேற்றைய பதிப்பில் சம்பியனாகிய வெள்ளாம் போக்கட்டி ஒளிர் அணி; வரணி ஒளிர் அணி என பிரசுரமாகி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது குப்பிழான் குறிஞ்சிக்குமரன்



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

குறிஞ்சிக்குமரன் அணி சார்பாக கிறிஸ்ரின், கஜரதன் ஆகியோர் தலா ஒரு கோலினை பெற்று கொடுத்தனர். (க)

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டச் சுற்றுக்கிண்ணம்-2020 தொடரில் இன்று வியாழக்கிழமை அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு குருநகர் சென். றோக்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் அணி மோதவுள்ளது.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்ட சுற்றுக்கிண்ணம் 2020 தொடரில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரியாலை.உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணியும் மாலை 5 மணிக்கு திருநெல்வேலி ஒலிம்பிக் அணியை எதிர்த்து குப்பிழான் ஞானகான அணி மோதவுள்ளது.

யாழ்.உதைபந்தாட்ட வீக்கின் உதைபந்தாட்ட சுற்றுக்கிண்ணம்-2020 தொடரில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணியும் மாலை 5 மணிக்கு ஆனைக்கோட்டை கலைஒளி அணியை எதிர்த்து திருநெல்வேலி மகாத்மாஜி அணியும் மோதவுள்ளது. (கு)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# சென்.பீற்றர்ஸ் அணியை வென்று அடுத்த சுற்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக கைலாஸ் , ஜனுகன் ஆகியோர் தலா ஒரு கோலினை பெற்று கொடுத்தனர். (க)

# உண்மையை பேசுகின்றார் சரியானதையே...

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அதிகார பரவலாக்கல் மூலமாக தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தால் நாம் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசியல்வாதியாக இருக்காத காரணத்தினால் அவர் உண்மைகளை பேசுகின்றார். ஆகவே அவர் சரியானதை செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது.

எனினும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள ஜனாதிபதியால் முடியாமல் போயுள்ளதென்றால் அதற்கு தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியாமல் போனமையே காரணமாகும்.

அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் மூலமாக தீர்வு காணப்பட வேண்டும் என்ற முயற்சிகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியவில்லை.

எனவே இந்த புதிய அரசாங்கம் உறுதியான தீர்வு ஒன்றினை பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த நாட்டில் பல்லின சமூகங்கள் வாழ்கின்றனர். எனினும் இந்த நாட்டில் பௌத்த சிங்களமக்கள் பெரும்பான்மை மக்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

எனினும் ஏனைய சமூகங்களும் வாழ்கின்றனர். அவர்களை புறக்கணிக்க முடியாது. ஏனைய மக்களின் கலாசாரம், சமூக கட்டமைப்பை மதிக்க வேண்டும்.

நீண்டகாலமாக இந்த கட்டமைப்பு உள்ளது. எமக்கு எவருடனும் முரண்பட வேண்டும் என்ற நோக்கம் இல்லை. அனைத்து மக்களுடனும் ஒன்றுபட்ட நாட்டுக்குள் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே உள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## விக்னேஸ்வரன்...

நடைபெறும் உலகத் தமிழர் திருநாள் விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

இவருடன் தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகம் மற்றும் செயல்திட்டத்திற்கான செயலாளர் தவச்செல்வம் சிற்பரனும் இதில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ளார். (ம-3)

## முண்டியடித்த யாழ்...

வாசிகள் நிற்க ஆரம்பித்து விட்டனர்.

யாழ்ப்பாண குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று இரவு வரை மக்கள் எரி பொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

யாழ் நகரம், புறநகர்ப்பகுதிகள், நெல்லியடி பகுதிகளில் இரவு வரை பெருமளவானவர்கள் எரிபொருளுக்காக வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

எரிபொருள் தொடர்பான எந்த தட்டுப்பாடும் இல்லாத நிலையில், இது போன்ற அவசரக்குடுக்கைத்தனம் செயற்கையான தட்டுப்பாட்டையே உருவாக்கும் என விமர்சனமும் கிளம்பியுள்ளது. (ம-3)

## யாழ்.மாவட்ட ஆய...

சந்திப்பின் பின்னர் வட மாகாண ஆளுநர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இது மிக மிக சம்பிரதாயபூர்வமான சந்திப்பு. நான் யாழ். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை வருகைதரு விரிவுரையாளராக இருந்தார்.

அத்தோடு எனது சொந்த ஊரான பத்தாவத்தையில் 26 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றினார். எனவே இது மிக சம்பிரதாயபூர்வமான சந்திப்பாக காணப்பட்டது.

அத்துடன் இதன்போது மாகாணத்தில் இருக்கின்ற மிக முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம். மக்களுக்கு வழங்கக் கூடிய தீர்வுகளை வழங்குவதற்கு நிச்சயமாக முயற்சிக்கின்றேன்.

தொடர்ந்து பல்வேறு சமய தலைவர்களை சந்தித்து எமது மக்களுக்கு இருக்கின்ற அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன் என கூறியுள்ளார். (ம-3)

## தமிழ் மொழி...

யிலோ அன்றி அரசிலோ எந்தவிதமான முடிவுகளும் எடுக்கப்படவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை பிரகடன உரை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-10)

## துன்னாலையில் கோஷ்டி மோதல்...

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அப்பகுதியைச் சேர்ந்த இரு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கோஷ்டி மோதலாக உருவெடுத்தது.

இதில் ஒரு வரை ஒருவர் தடிகளாலும், கொட்டன்களாலும், கற்களை வீசியும் தாக்கியதாகவும் இதில் வீடுகளும் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிக்கு இரவு சென்ற நெல்லியடி பொலிஸார் இரு பகுதியினரையும் கட்டுப்படுத்தி வீடு களுக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் மீண்டும் நேற்று புதன்கிழமை காலையும் அப்பகுதியில் மீண்டும் இரு பகுதியினருக்கிடையில் கோஷ்டி மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த இருவரின் வீடுகள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்களால் அடித்து நொறுக்கப்பட்டு உள்ளதுடன் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## அரசியல் பழிவாங்...

நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் விசேட கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் கூறுகையில், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இதுவரையிலான காலப்பகுதியில் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தொடர்பாக அரசாங்கத்திற்காக வாக்களித்த பெருமளவான மக்கள் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர் என மக்களிடையே காணப்படும் கருத்தாடல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையில் உறுதிமொழிகளை நிறைவேற்றுவதனை பின் தள்ளிவைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேட்டையாடப்படுகின்றனர்.

மேலும், கடந்த அரசாங்க காலத்தில் வழங்கப்பட்ட வேலை வாய்ப்புகள் பலவற்றை இரத்துச் செய்தும் மற்றும் குறித்த வேலை வாய்ப்புகளுக்கு உள்வாங்கப்பட்டவர்களை வேலைகளில் இருந்து வெளியேற்றியும் அரசியல் பழிவாங்கல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## முல்லைத்தீவில்...

வசந்தராசா பிணையில் விடுவிக்கப்பட்டபோது, அவர் சார்பில் பிணைக் கையொப்பமிட்டவர் அவரது சகோதரன்.

இதனால், நீதிமன்றத்திற்கு செல்வோம் என அவர் தனது இளைய சகோதரனிடம் தெரிவித்திருந்தார்.

எனினும், நீதிமன்றத்திற்கு செல்வதற்கு பயந்து, கடிதமொன்றை எழுதி வைத்து விட்டு அவர் உயிரை மாய்த்துள்ளார்.

இது தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் மேலதிக-விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,9)

## கரவெட்டி இளை...

இதில் கரவெட்டி புளியடி வீதி வதிரிப் பகுதியைச் சேர்ந்த ரஞ்சன் மயில்வாகனம் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் மேலதிக விபரங்கள் கிடைக்காத நிலையில் உறவினர்கள் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3.10,60)


அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 846
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.01.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,220,840/-
வெற்றி இலக்கங்கள் 15 42 45 53
ஆங்கில எழுத்து D
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3285 திகதி: 2020.01.08
ஊதா புதன்கிழமை
SATURDAY FORTUNE
சுப்பிரி தஹஸ்
விசேட இலக்கம் 4461
வெற்றி இலக்கங்கள் 11 54 57 64
ஆங்கில எழுத்து L
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 36,414,910/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2020.01.11 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும் வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.01.2020 வெற்றி வாரம் 2732 வர்ணம் பச்சை
மிதுனம் வெற்றி இலக்கங்கள் 28 45 51 53
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,911,834
2020/01/09ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 312
சீட்டிழுப்பு திகதி 08.01.2020 நீலம்
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 36 54 70
விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 49,720,396
2020/01/10 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2355
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 31 56 61 73
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 249
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 05 22 32 51
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1007
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 5 3 8 5 2 1
தேசிய லொத்தர் சபை

Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 482
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 08/01/2020
NLB NATIONAL LOTTERIES
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 03 34 47 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 08 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 193 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 389 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 9,883 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 6,444 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 161,696 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 29,724 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ 208,899,716.35
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.15,085,557.20
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.12,847,812.40
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 7,261,960.00
தேசிய லொத்தர் சபை
இணையம் www.nlb.lk
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

# முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து விசாரணை நடத்துக

## பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா



(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து அவரிடமே மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல - நெலும்மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்தியவங்கி பிணைமுறி மோசடி வழக்கின் பிரதான சந்தேகநபரான அர்ஜுன மகேந்திரனை திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்கு செல்லவதாக குறிப்பிட்டு, இவரை நாட்டிலிருந்து வெளியேற உதவியவர் ரணில் விக்கிரமசிங்கவே.

பிரதான சந்தேகநபர் இல்லாததால் அவர் வெளியேறுவதற்கு காரணமாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவையே கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் தற்போது சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந் நிலையில் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் கூறினார்.

மேலும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகள் தொடர்பில் அவருக்கு எதிராக மாத்திரம் நடவடிக்கை எடுக்காது அதனுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் இதன்போது கூறினார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# யாழ்.கொக்குவிலில் மாணவி ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்.கொக்குவில் பகுதியில் மாணவி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கில் வசித்துவரும் 20 வயதுடைய மகேஸ்வரன் கஜேந்தினி என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3)

கணக்காளர் சேவை (SLAcS)
விசேட வகுப்புக்கள்
வெள் (10/1), சனி (11/1) 9.00 - 3.00
FR - பாலா Sir
கடந்த கால வினாத்தாள்கள்
T.P:076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர் (C-8894)

றொமானியா ஹொட்டேல் வேலைவாய்ப்பு

Cook/Cook Helper
Waiter/Bartender
Cleaner/Dish
உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்
சம்பளம் US $ 450 - 500 81,700 - 90,785
மூன்று அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய
விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
எமரல்ட் ஐல் License No. 2268
077 00 38 215
077 55 46 956
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். இஷாரா ரெக்ஸ் - றீன் கேர்ல் அருகே
www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk

A/L - 2020 Day Class
புவியியல் - N. BABU
T.P - 077 936 5087
- அலகு ரீதியிலான மீட்டல்
- வாரந்தம் பரீட்சைகள்
- புதிய, தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
⇨ திங்கள் - பௌதிகப் புவியியல்
⇨ செவ்வாய் - மானிடப் புவியியல்
⇨ புதன் - பரீட்சை
⇨ வியாழன் - செய்முறைப் புவியியல்
⇨ வெள்ளி - பரீட்சை
(திங் - வெள்ளி ⇨ காலை 6.15 am)
DMI ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம்) யாழ்ப்பாணம். (1816)

வேலைவாய்ப்பு
யாழ்.நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு
கணனி வேலை தெரிந்த (Photoshop, CorelDRAW)
ஆண் பெண் இருபாலார்.
ஒப்செற் மிசின் பழகுநர் (ஆண்கள்)
(C-8893)
தொடர்பு:- 077 791 7680

DCM - சுன்னாகம்
கணக்கீடு S. தவா
(யாழ் நிலை 01, 02 மற்றும் 02 (ப.பா) மற்றும் தொடர் நிலைகளைப் பெற்ற என் மாணவச் செல்வங்களைப் வாழ்த்துகிறேன்.
புதிய பிரிவுகள் புதிய அலகுகள் ஆரம்பம்
A/L 2022 சனி 3 PM
A/L 2021 நீதிக்கூற்று சனி 4 PM
A/L 2020/Day காசுப்பாய்.கூற்று சனி 5 PM
(1817)
'தரமான சேவை நியாயமான கட்டணத்தில்' தொடர்பு:- 077 239 5858

DCM (N) - யாழ்.நகர்
(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
துறைசார் ரீதியான் தனித்துவமான ஆசிரியர் குழாம்
A/L 2022 கலை, வர்த்தக பிரிவு
A/L Day Class கலை, வர்த்தக பிரிவு
வர்த்தகப் பிரிவு - சனி, ஞாயிறு 9.00 - 1200
கலைப்பிரிவு - சனி, ஞாயிறு 8.00 - 12.00
ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு: 077 011 9434 நிர்வாகி

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1791)

பணிப்பெண் தேவை
திருநெல்வேலியில் உள்ள சிறிய குடும்பமொன்றுக்கு வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு:- (1807)
076 200 6731

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8786)

A/L 2019 உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் யாழ்.மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளுடன்...
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2022 Day Class (C-8892)
கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
T.P- 0761661986/0765350999

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(1815)
021 222 8093
புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

கனடாவில்
3 வருட வேலைவாய்ப்புடன் (WORK PERMIT)
நிரந்தர வதிவிட உரிமை (PERMANENT RESIDENCY)

(C-8785)
A/L சித்தியடைந்தால் போதுமானது!
தனியாகவோ / குடும்பத்தினருடனோ கனடாவில் குடியேறும் அரிய வாய்ப்பு!
CANADA MIGRATION PILOT
V2 Travels ✆ 0768226243

## வேலைவாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

❖ அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம், வெளியகம் இருபாலாரும்)

❖ கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும், அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும்)

❖ முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்- சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)

❖ வெப் மெஷின் பயிலுநர்கள் (ஆண்கள்)

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக

பொது முகாமையாளர்,
வலம்புரி,
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
வலம்புரி.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.